


The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 9, இதழ் - 6, நவம்பர் - டிசம்பர் 2023



**R5357**

## LITTLE WAYS OF DOING GOOD TO OTHERS
## மற்றவர்களுக்கு நன்மை செய்யும் சிறிய வழிகள்

“ஆகையால் நமக்கு கிடைக்கும் சமயத்திற்குதக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்.” கலாத்தியர் 6:10

இங்கே அப்போஸ்தலரது அறிவுரையானது, நன்மை செய்வதில் அது வார்த்தையாகவோ அல்லது செயலாகவோ இருந்தாலும் எல்லையில்லாமல் பரந்து இருக்கிறது. சிலர், நாம் கொடுக்கக்கூடிய வேறு எந்த ஊழியத்தைக் காட்டிலும் வார்த்தைகளினால் அதிகமான பலனை அடையக்கூடும். உலகத்திற்கு அதிகமான தேவைகளில் ஒன்று அதிகமான அறிவு. யாராவது இந்த அறியாமையை நீக்கி, வெளிச்சத்துக்குள் சென்றால் அவர் நிச்சயமாக மகா நன்மைகளை செய்வார். நன்மை மற்றும் தீமையின் கொள்கைகள், நல்லது மற்றும் கெட்டது கர்த்தருடைய ஜனங்களால் பகுத்துணரப்பட வேண்டும் என்பதே அப்போஸ்தலரின் கருத்தாக காணப்படுகிறது. நமது பார்வையில் எது நன்மையான செயலாக இருக்கும், எது தீமையான செயலாக இருக்கும் என்பதை நாம் காண வேண்டும். எது நன்மையானது எது தீமையானது என்பதை அநேகர் பகுத்துணர முடியாமல் இருக்கிறார்கள். தீமை செய்கிறவர்கள் சில விதிவிலக்கைத் தவிர, அறியாமையினாலும் குருட்டுத்தனத்தினாலும் செய்கிறார்கள்.

தர்சு பட்டணத்தானாகிய சவுல், சபைக்கு தீமையான காரியங்களை செய்து சபையை துன்பப்படுத்தி வந்தார். ஆனால் அதை உணராதிருந்தார். ஆகையால் தர்சுவின் பவுல் அல்லது இதே நிலைமையில் இருந்த மற்றவர்களின் புரிந்துகொள்ளும் (அறிவின்) கண்கள் திறக்கப்பட வேண்டியதாக இருந்தது.

### சில நல்ல வேலைகள் கணக்கிடப்பட்டது

மனுக்குல உலகத்திற்கு, தேவையானவர்களுக்கு ஆடை அளித்தல், பசியுள்ளோருக்கு உணவளித்தல், மன வளர்ச்சியற்றவர்களை ஆதரித்தல் போன்றவை நல்ல காரியங்களாக இருக்கின்றன. நாம் உலகத்தில் பார்க்கும் போது நன்மைகளை செய்ய அநேக முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை நாம் காண்கிறோம். இந்த முயற்சிகளில் சில ஞானமாகவும் சில ஞானமில்லாமலும் நடத்தப்படுகின்றன. நாம் உலகத்தை நேராக்க ஏற்படுத்தப்படவில்லை. நாம் யாருடனும் குறுக்கிட விரும்பவில்லை. நம்முடையதை தீர்மானிக்க நமக்கு உரிமை இருப்பது போல மற்றவர்களுக்கு தீர்மானிக்க உரிமை இருக்கிறது. ஆனால் யாராவது நன்மையானது என்று நினைத்துக்கொண்டு தீமையான வேலையை செய்தால், அதை நிறுத்துவதற்கு நாம் முயற்சிக்க நமக்கு உரிமை உண்டு. அதற்கு சரியானதும் ஞானமானதுமாக காணப்படுகின்ற சட்டம், நமது சொந்த வார்த்தைகள் அல்லது மற்றவர்களது வார்த்தைகளை பயன்படுத்தலாம். ஆனால் இங்கேயும் மற்ற மனிதர்களின் காரியங்களில் தலையிடுகிறவர்களாக நாம் இராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

சில நன்மையான காரியங்களின் புள்ளி விவரங்களை சேகரிப்பவராக நாம் இருந்தால், குருடர்களை கவனிக்க அவர்கள் படிக்கும்படியான சில முறைகளை ஏற்படுத்தி அவர்களை சந்தோஷப்படுத்தலாம், செவிடர்களையும், ஊமையர்களையும் கவனிப்பதும் ஒரு நல்ல வேலையாக இருக்கும். சேரி வேலையைப் பொறுத்தவரை நாம் அதிக இரக்கத்தை காண்பிக்க மாட்டோம். எனினும் எந்த நன்மையான காரியத்திலும் அதாவது சமூக நன்மை, சரீர பிரகார நன்மை, மனதளவிலான நன்மை ஆகியவற்றில் நாம் அதிக இரக்கம் காண்பிக்க வேண்டும். மேலே சொல்லப்பட்டவைகளைத் தவிர வியாதியஸ்தர்களுக்கும், சுகப்படுத்த முடியாதவர்களுக்குமான நல்ல ஏற்பாடுகள், மருத்துவமனைகள், சுகாதார நிலையங்கள் முதலானவைகள்.

சக மனிதர்களிடம் அன்பு காட்டி, துன்பத்தில் இருக்கிறவர்களின் மேல் இரக்கமாயிருப்பவர்கள் மேல் தயவு காண்பித்து, முன்னேற்றத்துக்கான முயற்சிகளை, எதிர்க்காமல் இருக்க வேண்டும். தீமையாயிருக்கும் எந்த காரியத்தின் மீதும் தேவனுடைய பிள்ளைகள் இரக்கம் காண்பிக்கக்கூடாது. நன்மையான எல்லாவற்றிற்கும் தேவன் பிரதிநிதியாக இருக்கிறார். தீமையான, தீமை பயக்கும் எல்லாவற்றிற்கும் சாத்தான் பிரதிநிதியாக இருக்கிறான். நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருப்போமானால் மனிதனுக்கான ஆதி ஏற்பாடுகளுக்கு எதிராக இருக்கிற எல்லாவற்றுடனும், சாத்தானுக்கு ஆதரவாக இருக்கும் எல்லாவற்றுடனும் நாம் இசைவாக இருக்கக்கூடாது.

சமூக உயர்வுக்காக எடுக்கப்படும் சிலமுயற்சிகள் தீமையாக இருக்காது. அதைச் செய்கிறவர்கள் நியாயமற்ற முறையில், வேதாகம வழிக்கு எதிராக இல்லையென்று நாம் உணருகிற வழியில் செய்யலாம். எனினும் நாம் சோசலிஸ்டுகளிடம் தயை உள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் நன்மை செய்ய முயற்சிக்கிறார்கள். ஆனால் தீமை மற்றும் தீங்கு செய்பவர்களுக்கு நாம் தயவு காண்பிக்கக் கூடாது. சீக்கிரத்தில் தேவன் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டுவர நோக்கங்கொண்டிருக்கிறார் என்று

நாம் விசுவாசிக்கிறோம். ஆனால் எந்த மனித முயற்சியும் இந்த மாற்றத்தை கொண்டுவர முடியாது என்று நம்புகிறோம். அறிவு சார்ந்த முறையில், அறிவுறுத்தப்பட்ட முறையில் நன்மை செய்ய வழியுண்டு. எப்படி தைப்பது, எப்படி சமைப்பது, அவர்களை பயனுள்ளவர்களாகக் கூடிய இயந்திர கலையை எப்படி கற்றுக்கொள்ளுவது போன்றவைகளை குழந்தைகளுக்கு போதிப்பது நல்லது. நமது பொதுப்பள்ளி ஆசிரியர்கள் நல்ல ஒரு வேலையை செய்கிறார்கள். வாலிபர்களுக்கு கற்பிக்கிறார்கள். அவர்கள் போதிக்கிறவைகளை சரியாக புரிந்து கொள்ளும்படி போதிக்கிறார்கள். மேலும் அது தேவனுடைய வார்த்தைக்கு இணக்கமாக சரியான போதனையாக இருக்கிறது.

**கர்த்தருடைய பிள்ளைகளின் சிறப்பான வேலை**

ஆனால் இவை எல்லாவற்றையும் காட்டிலும் உயர்ந்த வேலை இருக்கிறது. இவை எல்லாவற்றிலும் மதிப்புமிக்கதாக நாம் காண்கிற இதற்கு நாம் நேரத்தையும் ஜீவனையும் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சர்வ வல்லவரைக் குறித்தும் அவரது சித்தம், அவரது நோக்கங்கள் அவரது திட்டம் ஆகியவற்றை கேட்கக் காதுள்ளவர்கள் அனைவருக்கும் கொடுக்கப்படுகிற அறிவுறுத்தல் இதுதான். ஏனெனில் இவைகளெல்லாம் அவர்களது வாழ்க்கையோடு இணைந்திருக்கின்றன. இந்த அறிவுறுத்தல்களை பெறுகிறவர்கள் சரியான யோசனைக்கும், சரியான வாழ்க்கை முறைக்கும், சரியான கிரியைகளுக்கும் சிறந்த உதவியை பெறுகிறவர்களாகிறார்கள். ஏனெனில் இது தேவனுடைய வழி. அவரது சித்தத்தை செய்யவும், கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடக்கவும் அர்ப்பணம் செய்திருக்கும் அனைவருக்கும் இதுவே வழியாக அமைகிறது.

ஆகையால் நாம் தேவனுடைய திட்டத்திற்கு அதிகமதிகமாக இணக்கத்திற்கு வருகிறோம். வேறு எந்த வேலையும் தேவனுடைய குணலட்சணம், தேவனுடைய திட்டம், நம்மைக்குறித்த அவரது சித்தம் ஆகியவைகளை மற்றவர்கள் அறியப்பண்ணும்படியான மகத்தானதாக இருக்காது என்று நாம் உணருகிறோம். இது நமக்கு பெரிய ஆசீர்வாதங்களையும் பரிசுத்தத்தையும் கொண்டு வந்திருக்கிறபடியால், நாம் ஆறுதல்படுத்தப்பட்டிருக்கிறது போலவும் புதுப்பிக்கப்பட்டிருப்பது போலவும் மற்றவர்களும் ஆறுதல்படுத்தப்படவும் புதுப்பிக்கப்படவும் நற்செய்தியை நாம் மற்றவர்களுக்கு கொண்டு செல்ல விருப்பங்கொள்ள வேண்டும்.

இந்த வேலையை செய்வதில், சட்டமுறைப்படி நாம் செல்கிறோம். இது சுவிசேஷத்தை அறிவித்தல் என்று வேத வாக்கியங்களில் அழைக்கப்படுகிறது. இது அச்சிடப்பட்ட பக்கங்களினாலோ அல்லது வாய் வழியாகவோ அல்லது உருவகமாக பிரதிநிதித்துவப்படுத்தியோ சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. இது சகல மனிதருக்கும் நன்மை பயக்கும். இதை நாம் ஒரு கஷ்டத்தின் கீழ் உழைக்கிறோம். உலகமானது நற்செய்தியை உணர்ந்து கொள்ளக்கூடாதிருக்கிறது. தேவனுடைய திட்டத்தின் தத்துவத்தை காண இயலாதபடி சாத்தான் அவர்களது கண்களை குருடாக்கியிருக்கிறான்; அது அவர்களுக்கு நியாயமானதாக காணப்படவில்லை. இந்த நிலைமையில் மூலைக்கு வந்து சரியான காட்சியை பெறுவதற்கு பதிலாக ஒரு மூலையை சுற்றிப்பார்க்க முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஜனங்கள் நம்புகிறார்களோ, இல்லையோ, சுவிசேஷத்தை அறிவிப்பது கர்த்தருடைய வேலை என்றும் ஆகையால் அது சிறந்தது என்றும் நாங்கள் நம்புகிறோம். பலன் நன்றாக இருக்கும் வரை, தங்களது வேலை சிறந்தது என்று கருதுகிறவர்களிடமிருந்து அனுதாபத்தை பெற இது தடையாக இல்லை. சத்தியத்துக்கு இணக்கமாக இருக்கக்கூடிய அனைத்திற்கும், மனுக்குலத்திற்கு நன்மை பயக்கக்கூடிய அனைத்திற்கும் நாம் அனுதாபம் காண்பிக்க வேண்டும்.

யாவருக்கும் நன்மை செய்யத்தக்கதான சந்தர்ப்பத்திற்கு நமது மனதை அப்போஸ்தலர் அழைக்கிறார். ஆனால் சிலருக்கு நம்மால் கொடுக்கமுடியாத உதவி தேவைப்படும். உதாரணத்திற்கு சுவிசேத்தை போதிக்கிற வேலையை விட்டு விட்டு, சேரி வேலைக்கு செல்ல முடியாது. ஏனெனில் சேரி வேலை சுவிசேஷத்தை போதிக்கிற வேலையல்ல. ஒரு தெய்வ பக்தியுள்ள மருத்துவர், அவருடைய வேலையை பொருத்தவரை சரீரபிரகாரமாகவும், மனதின் பிரகாரமாகவும், ஆவிக்குரிய வழியிலும் நல்ல வேலையை செய்கிறார். ஆகையால் நாம் கசாப்பு கடைக்காரர், ரொட்டி சுடுபவர் முதலானவர்களுடன் அனுதினமும் சந்தர்ப்பங்களை பெற்றிருக்கிறோம். இவர்கள் அனைவரும் நமது உடன் சிருஷ்டிகளாயிருக்கிறார்கள். ஏனெனில் தேவன் சகல மனுக்குலத்தையும் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணினார். நாம் அவர்களுக்கு நன்மை செய்யவும், அவர்களை ஒன்றாயிருக்கவும், சந்தோஷமாயிருக்கவும் நல்ல வசதியாக இருக்கவும் நாட வேண்டும் என்று அப்போஸ்தலர் கட்டளையிடுகிறார்.

**அன்பான வார்த்தைகளும்**
**புன்சிரிப்புகளும் நன்மை பயக்கும்**

மிகவும் பரவலாக நன்மை செய்வதற்கு, பணத்தோடு கூடிய முயற்சி தேவைப்படுகிறது என்று கூறப்படலாம். காலத்தை குவிப்பதை பணம் குறிப்பிடுகிறது என்பது உண்மை. பணம் சம்பாதிக்க நேரம் தேவைப்படுகிறது. ஏதாவது ஒரு காரணத்திற்காக ஒரு டாலர் கொடுக்கப்பட்டால் அது அந்த அளவுக்கு நேரத்தை குறிக்கிறது. ஒருவர் ஆயிரம் டாலர் அன்பளிப்பாக கொடுத்தால் அந்த அளவுக்கு நேரத்தை அது குறிக்கிறது. ஏனெனில் பணமானது நேரத்தையும், வசதிகள் முதலானவைகளை வாங்குகிறது. ஆனால் கர்த்தருடைய பிள்ளைகள் அநேகர், பயன்படுத்த அதிக பணத்தை பெற்றிருக்க மாட்டார்கள். அவர்கள் அதிக பணத்தை பெற்றிருந்தால், அதை தாலந்து என்று உணர்ந்து, விசுவாச வீட்டாருக்கும் கர்த்தரின் சகோதரர்களுக்கும் பிரதானமாக பயன்படுத்தப்பட வேண்டும் என்று நினைப்பார்கள்.

நமது அனுதின வாழ்க்கையில் நாம் சந்திக்கிற மனிதர்களுக்கு பொருள் வகையில் உதவி செய்ய இயலவில்லை என்றால் அவர்களுக்கு எப்படி நன்மை செய்யக்கூடும்? நாம் சந்தோஷமாக இருப்பதாக காணப்பட்டு, மற்றவர்களுக்கு சந்தோஷத்தை ஊக்குவிப்பது சுலபமான வழிகளில் ஒன்று. ஒருவன் பரிதாபகரமாக காணப்பட்டு மற்றவர்களை சந்தோஷப்படுத்த முடியாது. ஆனால் நாம் எப்பொழுதுமே சந்தோஷமாக இருக்க முடியாது. ஆனால் நாம் முடிந்தவரை சந்தோஷமாக இருப்பதாக காண்பித்துக் கொண்டால் நாள் முழுவதும் நாம் சந்திக்கிறவர்களுக்கு நன்மை செய்வோம். மற்றவர்களுக்கு உதவிட பணம் இல்லாமலிருந்தாலும், நாம் இதை செய்ய முடியும். சந்தோஷமாக காணப்பட்டு, மற்றவர்களை சந்தோஷமாக ஆக்க முயற்சி செய். இரண்டாவதாக நம்மிடம் பணம் இல்லையென்றாலும், தேவையான சமயத்தில் ஒரு அன்பான வார்த்தையை, ஒரு புன்சிரிப்பை சந்தோஷமான குரலை, ஒரு மரியாதையைக் கொடுக்கலாம்.

வாழ்க்கையில் இப்படிப்பட்ட அனைத்து மரியாதைகளும் நன்மை செய்வதாக பொருள்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகளில் இருக்கும் அநேகருக்கு வாழ்க்கையில் சூரியகதிர்களைக் கொண்டு வரலாம். தேவனுடைய மகிமையான அறிவின் ஒளி இன்னும் அவர்களது இருதயங்களில் பிரகாசிக்கவில்லை. அவர்கள் இருளடைந்து, பயத்திலும் அச்சத்திலும் இருக்கிறார்கள். அவர்கள் தேவனை அறியவில்லை. சுயநல அறிவில்தான் சக மனிதர்களை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். மற்றவர்கள் தங்களை ஏமாற்றி நன்மை அடையாதபடி அவர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். நமது வழி பாதைகளில் பணத்தை விசிறிப் போடுவதைக் காட்டிலும், நமது பார்வை, நமது நடத்தை, நமது குரல் அவர்களுக்கு உதவிகரமாக, ஆறுதலாக, உறுதியளித்தலாக இருந்து அவர்களுக்கு நன்மை செய்வதாக இருக்கும். "அன்பான வார்த்தைகள் மரிப்பதில்லை." சந்தர்ப்பம் கிடைப்பதற்கும் தக்கவாறு, அவர்களுடன் செல்லுமாறு வார்த்தைகளை சொல்லுவது, எல்லா மனிதருக்கும் நன்மை செய்யும் சில வழிகளாகும்.

நமக்கு விசேஷித்த வேலை இருப்பதால், நாம் தெருக்களில் நடந்து எல்லா நேரங்களில் புன்சிரிப்பை தர இயலவில்லை. வாழ்நாளெல்லாம் நமது வேலை மகா ராஜாவுக்குரியது. நாம் நமது வேலைக்கு செல்லும் போது புன்சிரிப்பையோ அல்லது ஒரு அன்பான வார்த்தையையோ உதிர்த்துவிட்டு செல்ல வேண்டும். அது "யாவருக்கும் நன்மை செய்யும்" நோக்கில் இருக்கும். நாம் மிஷனரி ஊழியம் செய்யும் போது, நமது வேலை விசுவாச வீட்டாருக்காக இருக்க வேண்டும். விசுவாச வீட்டாராக இல்லாதவர்களிடையே செல்லும் போது, அதில் சிலர் முன்னரே விசுவாச வீட்டாராக இருக்கலாம் என்ற நம்பிக்கையுடனும், சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுபவர்கள், வழியை கற்றுக்கொள்ளும் போது எதிர்காலத்தில் கர்த்தருக்கு ஊழியம் செய்வார்கள் என்ற நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். நாம் அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று விரும்பினால், கர்த்தரை சேர்ந்தவர்களை, கர்த்தரின் ஆவிக்குரிய குடும்பத்தில் அங்கங்களாயிருக்கிறவர்களை எவ்வளவாக நாம் உற்சாகப்படுத்த விரும்புவோம்!

### விசுவாச குடும்பத்தார்

விசுவாச குடும்பத்தார் என்ற இந்த வார்த்தைகள், இந்த பாதையில் முழுமையாக இருக்கிறவர்களை மாத்திரமல்ல, ஓரளவுக்கு கர்த்தரையும் சத்தியத்தையும் நெருங்குகிற -வர்களையும் பரவலாக உள்ளடக்குகிறது. யாராவது மெய்யான ஆசாரிப்புக் கூடாரத்தினருக்கே இழுக்கப்படும் உண்மையே, ஏன் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்பதற்கு ஒரு பலமான காரணமாக இருக்கிறது. அவர் இன்னும் அர்ப்பணம் பண்ணாமலிருந்தாலும், வழியின் ஒரு பகுதிக்கு வந்திருக்கிறார்.

சரியான பொருளில், அர்ப்பணம் செய்தவர்கள் மட்டுமே விசுவாச வீட்டாராக இருக்கிறார்கள். இதை கவனிக்கிறவர்கள், கணக்கு பார்க்கிறவர்கள், பரந்த அளவில் விசுவாச வீட்டராக கருதப்பட வேண்டும் என்று நம்புவதற்கு அப்போஸ்தலரின் வார்த்தைகள் நியாயப்படுத்துகின்றன. அர்ப்பணம் செய்யப்போகிறவர்களாக காணப்படுகிற அனைவருக்கும் இந்த அத்தியாவசியமான உதவிகளை கொடுக்க வேண்டும். மனிதர்களை நேரடியாகவோ, மறைமுகமாகவோ கர்த்தரிடம் சுட்டிக்காட்டுவதே நமது நிலையான முயற்சியாகவும் விருப்பமாகவும் இருக்க வேண்டும். இப்படியாக நாம் "நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை" காண்பிக்க வேண்டும்.

சந்தர்ப்பம் கிடைக்கிறதற்குத்தக்கதாக நாம் இவைகளை செய்ய வேண்டும். இது நன்மை செய்வதற்கான காலங்களையும் வேளைகளையும் மற்றும் வழிகளையும் முறைகளையும் உள்ளடக்கியிருக்கிறது. நம்மை பொறுத்தவரை "சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும்" இதை செய்ய வேண்டும். நாம் நமது விருப்பு, வெறுப்புகளை பொருட்படுத்தாமல் மற்றவர்களைக் குறித்து அக்கறை கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். கணவன் தனது மனைவியைக் குறித்து அக்கறை கொள்ள வேண்டும். மனைவி தனது கணவன் மற்றும் குழந்தைகள் குறித்து அக்கறை கொள்ள வேண்டும்.

### தெளிந்த புத்தியுள்ள ஆவி அவசியம்

நமக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்திற்குத்தக்கதாக எந்த வழியிலும் யாருக்கும் ஊழியம் செய்ய விரும்ப வேண்டும். அநேக சந்தர்ப்பங்கள் கிடைத்தால், நமது தெளிந்த புத்தியுள்ள ஆவியை பயன்படுத்தி, தேவனுடைய சித்தம் எதுவாக இருக்கும் என்பதை அறிந்து அந்த ஊழியத்தை செய்ய வேண்டும். நல்ல பலன்களைப் பெறவும், முடிந்தவரை சிறந்த நன்மைகளை பெறவும் கர்த்தருடைய ஜனங்கள் தங்களது வாழ்க்கையை ஒழுங்குப்படுத்த வேண்டும். நமது வாழ்க்கை முறையை தெரிந்தெடுப்பதற்கு, ஐந்து வகையான வர்த்தகத்திற்கு சந்தர்ப்பம் கிடைத்தால், அதில் இலாபகரமானதை, நேர்மையானதை, சுத்தமானதை, அதிக உழைப்பு தேவைப்படுவதை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். இது இயற்கையான நிலைப்பாடு. ஆனால் தெய்வீக நிலைப்பாட்டிலிருந்து, கிறிஸ்தவனின் நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும் போது, எதில் நாம் கர்த்தருக்கு அதிகமாக ஊழியம் செய்ய முடியும் என்பதை பார்க்க வேண்டும். தேவனுடைய சித்தத்திற்கும் நமது இருதய நோக்கத்திற்கு இசைவாகவும் இருக்கும் சிறந்த வாய்ப்பை நாம் கண்டு பிடிக்க வேண்டும்.

இந்த விஷயத்தில் நாம் ஏதாவது தவறு செய்திருந்தால், நாம் வேறு இடத்தில் நுழைவதற்கு கர்த்தர் கதவை அகலமாக திறக்கிறார். அல்லது இந்த இடத்தில் நாம் நிலைத்திராதபடி கர்த்தர் அதை இறுக்கினால் "யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தாருக்கும் நன்மை செய்யும்படி" அதிக சந்தர்ப்பங்களை நாம் பெறும்படிக்கு அதற்கேற்றாற்போல் நமது காரியங்களை நாம் ஏற்பாடு செய்வோமாக.

மனிதர்களிடமிருந்து நம்மை பிரிக்கக்கூடிய சில வேலைகளும் உண்டு. அங்கே ஜனங்களை சந்திக்கக்கூடிய குறைவான சந்தர்ப்பமே இருக்கும். மோசே ஒரு சமயத்தில் அவரது மாமனார் எத்திரோவின் ஆடுகளை மேய்க்கிற வேலையை விட்டு, மீதியான் தேசத்தை விட்டு பிரிந்தது கர்த்தருடைய சித்தமாக இருந்தது. ஆனால் தேவன் தயாரான

உடனே, மோசேயை அழைத்து பெரிய சந்தர்ப்பத்தையும் பொறுப்பையும் கொடுத்தார். வனாந்தரத்தில் அந்த வேலை நல்ல சந்தர்ப்பமும் கூட என்பதில் சந்தேகமில்லை. அதற்கு முன்பு எகிப்தின் பள்ளியில் இருந்த போது அவர் அனுபவ பாடங்களை கற்றுக்கொள்ளுவதற்கு பெரும் சந்தர்ப்பத்தை பெற்றிருந்தார்.

ஆகையால் கர்த்தருடைய ஜனங்கள் தங்களது சந்தர்ப்பத்திற்காக விழிப்புடன் இருக்க வேண்டும். முடிந்தவரை பிறருக்கு நன்மை செய்ய கர்த்தரின் விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்ய, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து நாம் அனுதினமும் தேட வேண்டும். கிறிஸ்தவன் தனது நேரத்தையும் வசதியையும் செலவு செய்து யாவருக்கும் நன்மை செய்யவும், ஆனால் தனது சகோதரர்களுக்காக தனது ஜீவனை கொடுக்கவும், தயாராக இருக்க வேண்டும். அவன் நாளுக்கு நாள் ஜீவனைக் கொடுக்க தயாராக இருக்க நாட வேண்டும். அதாவது சத்தியத்தை அறிவிக்க நேரத்தை கொடுக்க வேண்டும். அல்லது கர்த்தருடைய சகோதரர்களை தீங்கு நாளில் நிற்க திராணியுள்ளவர்களாகும்படி, “தேவனுடைய முழு சர்வாயுதத்தை தரித்துக்கொள்ள” நாம் உதவ நாம் சந்தர்ப்பத்தை நாட வேண்டும்.

**R5358**

## CHARACTER LIKENESS TO THE LORD
## கர்த்தருக்கு ஒப்பான குணலட்சணம்

“நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்......... அவர்கள் ஒருமைப்பாட்டில் தேறினவர்களாயிருக்கும்படி..... நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கு நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.” யோவான் 17:9, 20-23

இந்த வார்த்தைகளானது, நமது கர்த்தர் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று ராத்திரியிலே, நினைவுகூருதலான இராப்போஜனம் ஆசரிக்கப்பட்ட மேல் வீட்டறையிலிருந்து கெத்செமனே தோட்டத்திற்கு போகிற வழியில், கர்த்தரினால் உரைக்கப்பட்டதை நாம் நினைவுகூருகிறோம். அந்த சமயத்தில் அவர் பன்னிரண்டு அப்போஸ்தலருக்காக, அல்லது பதினோருவருக்காக வெளிப்படையாக ஜெபித்தார். ஏனெனில் இந்த சந்தர்ப்பத்தில் அவர் கூறியதாவது: “கேட்டின் மகன் கெட்டுப் போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை.” (யோவான் 17:12) ஆனால் நமது தலைப்பு வசனம் அவருடைய ஜெயமானது சுவிசேஷயுகம் முழுவதும் வருகிற அவரது உண்மையுள்ள பின்னடியார்களுக்கானது என்று காண்பிக்கிறது. அவர் கூறுகிறார்: “நான் இவர்களுக்காக, வேண்டிக்கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்கிறேன்.” (யோவான் 17:20) அவரும் அவருடைய பிதாவும் ஒன்றாயிருப்பது போல, அதாவது ஒரே மனதுடையவர்களாயிருப்பது போல அவரது பின்னடியார்களும் ஒன்றாயிருக்கும்படி நமக்காக ஜெபித்தார்.

இந்த வசனமானது கர்த்தராகிய இயேசுவும் பிதாவும் ஒரே ஆள் அல்ல என்பதற்கு சிறந்த நிரூபணமாயிருக்கிறது. சபை அனைவரும் ஒரே ஆளாக இருக்கும்படி ஜெபித்திருக்க முடியாது. அது சித்தத்தில் ஒருமைப்பாடும், சித்தத்தில் முழுமையான இணக்கமும் நோக்கத்தில் ஒருமைப்பாடுமாகும். “என் சித்தம் அல்ல உமது சித்தமே நடக்கக்கடவது” என்று கர்த்தர் கூறினார். இப்படியாக கர்த்தர், பிதாவுடனும் பிதாவினுடைய சித்தத்துடனும். பிதாவின் திட்டத்துடனும் முழுமையான ஒருமைப்பாட்டிற்குள்ளும் இணக்கத்திற்கும் வந்தார். இது ஒருவருக்கொருவர் தங்களது உரிமைகளை விட்டுக்கொடுப்பது அல்ல.

உலகத்தின் இரட்சகராகவும் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகவும் ஆவதற்கு முன்னர், மனுக்குலத்தின் உலகத்தில் அவர் செய்யும் முதல் வேலை சபையை தெரிந்து கொள்ளுதல் ஆகும். தற்போது அவர் ஆரம்பித்திருந்த வேலை இது தான். அவர்களுக்கு சாட்சியத்தை அளித்துக் கொண்டிருந்தார். சபை முழுவதும் ஒரே நோக்கம் உடையவர்களாகவும். தமது சித்தத்துடன் ஒருமைப்பாடு உடையவர்களாகவும் இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். நமது சித்தத்தை முழுவதுமாக ஒப்புக்கொடுக்கிற இந்த ஒரே வழியில் மட்டுமே இதை பெற முடியும் என்று நாம் காணக்கூடும். வேதவாக்கியங்கள் கூறுவது போல இதை நாம் மரித்தவர்களாக ஆவதினாலே செய்யப்படுகிறது.

### கருத்து வேறுபாடுக்கான இரண்டு காரணங்கள்

சரீரம் மற்றும் சூழ்நிலைகளிலிருந்து ஒரு மனுஷன் அல்லது ஒரு ஸ்திரீ என்ன விருப்பத்தை கொண்டு வர முடியுமோ அதுவே அவர்களது சித்தமாக இருக்கிறது. ஆகவே நமது சீஷத்துவத்தின் ஆரம்பத்திலேயே பார்க்கப்பட வேண்டிய முதல் காரியம் நமது சித்தத்தை பொறுத்தவரை நாம் மரித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கிறோமா என்பது தான். இதைச் செய்கிற அனைவரையும் புது சிருஷ்டிகள் என்று அவர் அழைக்கிறார். அவர் அவர்களுக்கு அவர்களுடையதாக இருக்கும்படியான பரிசுத்த ஆவியை, புதிய சிந்தையை, புதிய சித்தத்தை அருளுகின்றார். அவர்கள் எந்த அளவுக்கு புதிய சிந்தையை, புதிய சித்தத்தை பெறுகிறார்களே அதற்கேற்றாற்போல் ஒருவரோடொருவர் ஒருமைப்பாடு அங்கே காணப்படும்.

கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருப்பதற்கு காரணம் உண்மைத்தன்மை அல்லது அறிவில் குறைவுபடுவதுதான். உண்மைத்தன்மையில் குறைவு பட்டால், அவர்கள் படிப்படியாக பின் வாங்கிப் போவார்கள். தேவன் தமது குடும்பத்தில் யாரையும் பலவந்தப்படுத்தி தெரிந்துகொள்ளுவதில்லை. தம்மை உண்மையோடும் ஆவியோடும் தொழுதுகொள்ளுகிறவர்களையும் எல்லா காரியங்களிலும் உண்மையுள்ளவர்களையும் தெரிந்தெடுக்கிறார். அந்த வகுப்பாரைத் தெரிந்து கொள்வதற்காவே அவர் இந்த சுவிசேஷ யுகம் முழுவதையும் ஒதுக்கியிருக்கிறார். தெரிந்தெடுக்கும் இந்த வேலையானது ஏறக்குறைய பத்தொன்பது நூற்றுண்டுகளாக நடைபெற்றுக்

கொண்டிருக்கிறது. இந்த கூட்டத்தார் ஒரு சிறு மந்தையாக இருப்பார்கள். அவர்கள் வெளிப்படையாக தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாராக இருப்பார்கள். அவர்கள் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கும்படி எதிர்பார்க்கப்படுகின்றனர்.

அநேகருக்கு அந்த வழியில் நடப்பதற்கும், உலகமும், அதன் திட்டங்களும் ஒன்றமில்லாதவைகள் என்றும் குப்பையும் தூசியுமாக இருக்கிறது என்றும் எண்ணுமளவுக்கு தேவனிடத்திலும், நீதியினிடத்திலும் விசுவாசம் கொண்டிருப்பதில்லை. உண்மையில்லாதவர்கள் தங்களது உயிர் நிலைமையை விட்டு விடும் போது விசவாசமுள்ளவர்கள் தாங்கள் ஒன்றாக இழுக்கப்படுவதையும் காண்பார்கள். விசுவாசம் உள்ளவர்களிடையே அதிகமதிமாக ஒருமைப்பாடு காணப்படும். இது எல்லா காலங்களிலும் எல்லா தேசங்களிலும் உண்மையாகவே இருக்கும். முற்றும் உண்மையுள்ளவர்கள் அனைவரும் பிதாவின் சித்தத்தை செய்ய விரும்புகிறவர்களாகவும் பிதாவின் ஊழியத்தில் தங்களது ஜீவனையும் கொடுக்க விரும்புகிறவர்களாகவும் இருப்பார்கள். இந்த விருப்பம் அவர்களுடைய ஒருமைப்பாட்டில் இருக்கும்படி செய்யும்.

## முதிர்ச்சியினிமித்தம் பிணக்கு குறையும்

அவர்கள் ஒருமைப்பாட்டில் தேறினவர்களாயிருப்பது குறித்து நமது கர்த்தர் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு தனிப்பட்ட அங்கமும் முன்னேறும் போது இடத்தை நிரப்புதவற்கும் மிகவும் பாத்திரராகிறார் அல்லது அவருக்கு கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிறார். இப்படியாக கிறிஸ்துவின் சரீரமானது செயல்திறன்மிக்கதாக ஆகின்றது. ஆனால் இங்கு சபையின் தேறின நிலையை, நிறைவடைந்ததைக் குறிப்பிடுகிறார். அவர் யுக முடிவின் போது கிரியை நிறைவடைந்ததை, பூரணமடைந்ததை அவர்கள் ஒருமைப்பாட்டில் தேறினதை குறிப்பிடுகிறார். ஆனால் மகா நிறைவை கர்த்தர் தாமே கொண்டுவருவார். நமது மாம்சத்தில் வேறுபாடுகள் இருப்பதினால், எல்லாவற்றிலும் நாம் ஒரே மாதிரி இருக்க முடியாது. இப்பொழுது நாம் ஏறக்குறைய தெளிவற்ற நிலைமையிலேயே பார்க்க முடிகிறது.

இப்பொழுது நம்மால் காரியங்களை முழுமையாகவும் நிறைவாகவும் பார்க்க முடியவில்லை. இதனிமித்தம் பிதாவினுடைய சித்தத்தை செய்யும்படி முழுமையாக அர்ப்பணம் செய்தவர்களிடையே உராய்வுகள் எப்பொழுதும் இருக்கும். நாம் முதிர்ச்சி அடையும் போது இந்த உராய்வு குறைய வேண்டும். "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே" உயிர்த்தெழுதலின் மாற்றத்தின் பொழுது மகிமையான நிறைவை அடையும் வரை நம்மால் கண்ணால் பார்க்க இயலாது. "மாம்சமும் ரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பது இல்லை." இந்த அபூரண சரீரங்களில்தான் நமக்கான பரீட்சைகளை பெற வேண்டியுள்ளது. முடிவு பரியந்தம் உலகம், மாம்சம் மற்றும் சத்துருவானவனுக்கு எதிரான போராட்டத்தில் நமது உண்மைத்தன்மையை காண்பிக்கிறவர்கள், கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரராயிருந்து, அவரது ராஜ்யத்தில் பங்குபெற்று, மனுக்குலத்தின் உலகத்தை ஆசீர்வதிக்கிற தெய்வீக திட்டத்தை செயல்படுத்துகிறவர்களாக இருப்பார்கள்.

## பிரமிக்க வைக்கும் கூற்று

கர்த்தருடைய வெளிப்படுதலின் எபிபெனியா காலத்தில் அல்லது பிரகாசமான காலத்தில், சபையை வழிநடத்துகிற தற்கால வேலையை முடித்தவராக காணப்படுவார்; உலகமானது வேறு ஒரு யுகத்தின் கீழ் இருப்பதாக அறிவிக்கப்படும். உலகமானது காரியத்தை முழுமையாக அறிய வரும் போது, நமது கர்த்தர் தமது சீஷர்களுடன் ஏறெடுத்த கடைசி ஜெபத்தில் பிதாவானவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அன்பு கூறுவது போல சபையையும் அன்பு கூறுகிறார் என்கிற உண்மையை அறிந்து கொள்ளுவார்கள். இது மிகவும் பிரமிக்க வைக்கும் கூற்று. இது நமது கர்த்தரிடத்தில் சுயநலம் எதுவும் இல்லை என்பதை காண்பிக்கிறது. "அவர்கள் எனக்கு கீழாகத்தான் இருப்பார்கள். நான் பெறும் மகிமையை அவர்கள் ஒருபோதும் அடைய மாட்டார்கள்" என்று அவர் கூறவில்லை.

மாறாக, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, கொள்கை மற்றும் குணலட்சத்தின் அடிப்படையிலேயே தமது அன்பை செயல்படுத்துவார் என்பதை அறிந்திருக்கிறார். இந்த மகிமையான கூட்டத்தாரில் அங்கங்களாயிருக்கும் அனைவரும் நமது கர்த்தர் பெற்றிருந்த அதே மகிமையான குணலட்சணத்தை உடையவர்களாக இருப்பார்கள். சொல்லப்போனால் மனதின் மையப்பகுதி வரை உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்கள், தங்கள் நீதியை சிநேகித்தது, அக்கிரமத்தை வெறுப்பதை நிரூபித்து காட்டியிருக்க வேண்டும். "நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர், ஆதலால் தேவனே உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்" என்று நாம் வாசிக்கிறோம். (எபிரேயர் 1:9) ஆகையால் அவர் சபை வகுப்பாரின் தலையாக இருக்கும்படி அவர் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார். இந்த வேத வாக்கியத்தில் சபை வகுப்பார் அவரைக்காட்டிலும் கீழானவர்கள் என்று குறிப்பிடப்படாமல் தோழர்கள் என்றும் பொதுவான ஐக்கியத்தில் ஒரே தளத்தில் இருப்பார்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். அப்பொழுது உலகமானது, பிதாவானவர் இயேசுவை அன்புகூர்ந்தது போலவே, சபையையும் அன்புகூர்ந்தார் என்பதை அறிந்து கொள்ளுவார்கள். சபையானது தனது கர்த்தராகிய இயேசுவுடன் அதே தளத்திலேயே இருப்பார்கள் என்று நாம் புரிந்து கொள்ளுகிறோம். எனினும் தேவன் அவரை, "எல்லாவற்றிற்கும் மேலாக, தலையாக தந்தருளினார்" என்றும் தேவன் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்படத் தக்கவர் என்றும் நாம் மனதில் வைக்க வேண்டும். சபையானது ஒரு போதும் கிறிஸ்துவுக்கு சமமாக இருப்பதில்லை.

நமது பரம பிதாவானவர் கிறிஸ்துவை நேசித்தது போல நம்மையும் நேசிக்கிறார் என்பதும், கர்த்தர், வைரத்தை சேற்றிலோ அது வேறு எங்கு காணப்பட்டாலும் நேசிக்கிறார் என்பதும் நமக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது! மனிதனின் பாவச்சேற்றிலிருந்து இந்த பாத்திரங்களை கர்த்தராகிய இயேசு தெரிந்து கொண்டிருக்கிறார். கர்த்தராகிய இயேசு உண்மையாய் இருந்ததுபோல உண்மையுள்ள -வர்களாகவும் முற்றும் ஜெயங்கொண்டவர்களாகவும் தங்களை நிரூபித்து காண்பிக்கும் வகுப்பாரை, பிதாவானவர் கர்த்தராகிய இயேசுவை அன்பு கூர்ந்தது போல அன்பு கூர்ந்து தம்முடைய குமாரனுடன் அவர்களையும் மகிமைப்படுத்துவார்.

R5359

## THE HEIGHTS AND DEPTHS OF DIVINE LAW
## தெய்வீக திட்டத்தின் ஆழமும் உயரமும்

"ஆகையால் இந்த கற்பனைகள் எல்லாவற்றிலும், சிறிதான தொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்கு போதிக்கிறவன் பரலோகத்தில் எல்லாரிலும சிறியவன் எண்ணப்படுவான். இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்." (மத்தேயு 5:19)

தெய்வீக பிரமாணத்தை பொறுத்தவரை கிறிஸ்தவ ஜனங்களிடையே முற்றிலும் தவறான கருத்து நிலவுகிறது. இப்படி பொதுவாக கருதப்படுவதற்கு காரணம், நாம் நியாயப்பிரமாணத்துக்கு கீழாக இல்லை, கிருபையின் கீழாக இருக்கிறோம் என்றுஅப்போஸ்தலர் கூறினார். நியாயப்பிரமாணமானது நீக்கப்பட்டது என்று கூறினார். ஆனால் இந்த கருத்து தவறு என்று நம்புகிறோம். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப்பிரமாணத்தில் உள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று நமது கர்த்தர் கூறினார். எழுதப்பட்ட அனைத்தும் நிறைவேறும்.

தெய்வீக சட்டம் எப்பொழுதுமே நிலைத்திருக்கும். ஆதாமிடம் அது தெளிவாக சொல்லப்பட்டது. அவரது பல்வேறு அங்க பகுதிகள் தெய்வீக சட்டத்தின் வெளிப்பாடு. தேவனுடைய பிரமாணம் அவரது இருதயத்தில் எழுதப்பட்டது. அவர் தெய்வீக சிந்தைக்கு மிகவும் இசைவாக இருந்தார். ஆகையால் அவர் தெய்வீக சட்டத்திற்கு முழுவதுமாக இசைவாக இருந்தார். ஆகையால் பாவம் உள்ளே வந்த போது, அவரில் இருந்த தெய்வீக சட்டம் பெருமளவுக்கு அழிந்து போனது. நன்மை மற்றும் தீமையை மதிப்பீடு செய்யக்கூடிய அனைவரிடமும் தெய்வீக சட்டம் இன்னும் கொஞ்சம் இருக்கிறது. ஆனால் நல்ல ஜீவியத்தை நடத்த போதுமானதாக இல்லை.

தேவன் இஸ்ராயேல் ஜனங்களை கையாளும் போது ஒரு நியாயப்பிரமாணத்தை அவர்களுக்கு கொடுத்தார். இந்த நியாயப்பிரமாணம் பத்து கட்டளைகளாக எழுதப்பட்டு. மனிதனின் கடமைகளின் ஒரு சுருக்கமான தொகுப்பாக இருக்கிறது. அதிலிருந்து அநேக பாடங்கள் வரையப்படலாம். பத்து கட்டளைகளைப் பற்றிய நமது அறிவில் தேவனுடைய பிரமாணம் என்ன என்பதை இன்னும் அறிந்திருக்கிறோம். தேவன் அந்த பிரமாணத்தை ரத்து செய்யவே இல்லை. அது இன்னும் யூதர்களின் மேல் நியாயப்பிரமாணமாகவும் அமலில் இருக்கிறது. ஆனால் புறஜாதியார் நியாயப்பிரமாணத்திற்கு கீழாக இருந்ததில்லை.

யூதர்கள் நியாயப்பிரமாணத்தை கடைபிடித்தால் அவர்களுக்கு தேவன் நித்திய ஜீவனை வழங்குவேன் என்றார். அவர்கள் நியாயப்பிரமணாத்தில் கட்டப்பட்டிருந்தனர். ஆகையால் ஜீவனை அளிப்பவராகிய கிறிஸ்துவுக்குள் அவர்கள் வருவதற்கு முன்பு, நியாயப்பிரமாணத்துக்கு மரிக்க வேண்டியவர்களாக இருந்தனர் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். (ரோமர் 7:4) இது அவர்கள் தேவனுடைய பிரமாணத்துக்கு மரிக்க வேண்டும் என்று பொருள்படாமல், ஆனால் நியாயப்பிரமாணத்திற்கு மட்டும் மரிக்க வேண்டும் என்று கூறுகிறது. நியாயப்பிரமாணத்தை கடைபிடிப்பதால் நித்திய ஜீவனை அடையக்கூடும் என்ற நம்பிக்கையை விட்டு விட வேண்டும் என்று அது பொருள்படுகிறது.

புறஜாதி கிறிஸ்தவர்கள் நுழைந்திருக்கும் புதிய நம்பிக்கை தேவனுடைய பிரமாணத்தை ரத்து செய்யவோ அல்லது அவரது பிரமாணத்தின் கடமையிலிருந்து அவர்களை விடுவிக்கவோ இல்லை. நமது அபூரணத்தினால் பிரமாணத்தை பூரணமாக கடைபிடிக்க முடியாததினால், கிறிஸ்துவின் புண்ணியத்தால் நாம் மூடப்படும் போது கிறிஸ்துவுக்குள் நம்மை ஏற்றுக்கொள்ளும்படியான ஏற்பாட்டை தேவன் செய்திருக்கிறார். இவர்களைக் குறித்து அப்போஸ்தலர் கூறியதாவது: "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறுகிறது." தெய்வீக பிரமாணத்தின் ஆவியின்படி நடக்க நாம் பூரண ஜீவிகளாக இருக்க வேண்டியது அவசியம். அது பூரண மனிதனுக்கு இது தேவையானது.

### கிறிஸ்தவனின் தரநிலையின் பூரணம்

நாம் கவனித்துக் கொண்டிருக்கிற கர்த்தரின் வார்த்தைக்கு இந்த கருத்து திறவு கோலாக இருக்கிறது. இந்த தேவனுடைய பிரமாணத்தை மீறி, அதன்படி செய்ய மற்றவர்களுக்கு உதாரணமாக இருந்தோ, கற்பனையின் மூலமோ போதிக்கிறவர்கள் சிறியவர்களாக கருதப்பட வேண்டும். தேவனுடைய பிரமாணத்தை கடைபிடித்து அதன்படி செய்ய மற்றவர்களுக்கு உதாரணமாக இருந்தோ அல்லது கற்பனையின்படி போதிக்கிறவர்கள் சபையில், கருநிலையில் இருக்கும் ராஜ்யத்தில் பெரியவர்களாக கருதப்பட வேண்டும். தங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவை பின்பற்ற இந்த ராஜ்யத்தின் வகுப்பார் தாயையும் தந்தையையும் மற்றும் சகலத்தையும் கைவிட வேண்டும். வேறு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் கிறிஸ்துவே முதலாவதாக இருக்க வேண்டும். இந்த பின்னடியார் இடையே வேறுபாடுகள் இருக்கும். சிலர் பரம்பரை பலவீனத்தினால் விசுவாசக் குறைவுள்ளவர்களாக இருப்பார்கள். மற்றவர்கள் மிகவும் விசுவாசமுள்ளவர்களாக இருப்பார்கள். தெய்வீக பிரமாணத்தை இருதயத்திலும் வாழ்க்கையிலும் பூரணமாக கைக்கொள்ளுபவர்கள் தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலாக இருப்பார்கள்.

அது போலவே இப்போதும் நம்மிடம் இருக்கிறது. ஊழியத்தில் மிகவும் ஊக்கமும் வைராக்கியமும் உள்ளவர்களை நாம் மிகவும் உயர்வாக மதிக்கிறோம். ஒழுங்கீனமாயும் உறுதியற்றும் நடக்கிறவர்களை குறைவாக மதிக்கிறோம். சபையின் அறியாமையுள்ளவர்களையும் பலவீனர்களையும் நாம் கவனிக்க வேண்டும். இவர்களிடம் நாம் இரக்கம் காண்பிக்க வேண்டும். ஆண்டவரின் அடிச்சுவட்டில் மிகவும் நெருக்கமாக நடப்பவர்களைப் போல தங்களது பலவீனங்களை ஜெயங்கொள்ளாதவர்கள் ராஜ்ய வகுப்பாரில் அதிகமாக மதிக்கப்படமாட்டார்கள். யூத பிரமாணத்தின் மேலுள்ள இரக்கத்தினால் ஆண்டவர் சுவிசேஷத்தை போதிக்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளுகிறோம். அவர் கூறியதாவது: "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்." பூரணத்தைக் காட்டிலும் குறைவான தர நிலை இல்லை. பிதாவானவரைப் போல கொஞ்சம் இருங்கள் என்றோ, கிட்டதட்ட அவரைப் போல

இருங்கள் என்றோ கர்த்தர் கூறவில்லை. அவர் பூரணமான தரநிலையை சமர்ப்பிக்க வேண்டும். யூதர்கள் பூரணத்திற்காகவும் நித்திய ஜீவனுக்காகவும் முயற்சி செய்தார்கள். கிறிஸ்தவர்கள் பூரணத்திற்காக முயற்சித்து நித்திய ஜீவனை பெற எதிர்பார்க்கிறார்கள். பரிபூரணமாக பிரமாணத்தை கடைபிடிப்பதின் மூலமாக அல்ல, அதை அவர்களால் செய்ய முடியாது, கிறிஸ்துவின் புண்ணியத்தினால் அதை பெறுவார்கள். இது அவர்களது குறைகளை சரிசெய்யும். கறைகளை மூடும்.

### ஆழ்ந்த உணர்வுகளின் மேல்ஓடு

தெய்வீக சட்டம் பழைய ஏற்பாட்டில் மாத்திரம் சுருக்கமாக சொல்லப்படாமல் நமது கர்த்தரே, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறரிடத்திலும் அன்பு கூருவாயாக" என்று சுருக்கமாக கூறுகிறார். (உபாகமம் 6:5; லேவியராகமம் 19:18; மத்தேயு 22:37-39) இது இன்னும் சுருக்கமாக, "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது" என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். (ரோமர் 13:10) தேவனிடத்தில் செலுத்தும் அன்பானது. அவரது வார்த்தைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்தையும் செய்யும்படி நம்மை வழி நடத்தும். பிறனிடத்தில் செலுத்தும் அன்பானது கற்பிக்கப்படாத அவர்களுக்கான கடமைகளை செய்ய நம்மை வழிநடத்தும்.

கிறிஸ்தவர்களாக நாம் பிரமாணத்தின் கட்டளைகளை நாமே அப்பியாசப்படுத்தி வந்தால், நாம் சுலபமாக அவை அனைத்தையும் விஸ்தரிக்கலாம். உதாரணத்திற்கு விபசாரத்தைப் பற்றிய நமது கர்த்தரின் விளக்கம் பிரமாண அட்டவணையில் இருப்பதை காட்டிலும் இன்னும் அதிகமான தேடுதலாக இருக்கிறது. கொலையைப் பற்றிய புதிய ஏற்பாட்டின் விளக்கம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதை விட மிகவும் ஆழமாக இருக்கிறது. சகோதரனை வெறுப்பவன் கொலை பாதகனாக இருக்கிறான் என்று அப்போஸ்தலர் யோவான் அறிவித்தார். ஒரு சகோதரனை வெறுக்கிறவனின் இருதயத்தில் கொலை பாதகம் இருப்பதை காணக்கூடும். தெய்வீக சித்தத்திற்கு மாறாகவோ, எந்த அளவுக்கோ தோன்றுகிற விசுவாசத்தை சகலத்தையும் காண்கிற கண்ணானது காண்கிறது. இந்த கருத்திலிருந்து பத்து கட்டளைகள் மேல் ஓடாக இருக்கிறது என்றும் அது இன்னும் அதிகமான ஆழ்ந்த உணர்வுகளை உடையதாக இருக்கிறது என்றும் நாம் காண்கிறோம்.

வாரத்தின் ஏழாம் நாளில் எந்த வேலையையும் செய்யாமலிருப்பது யூதர்களின் வழக்கமாக இருந்தது. கிறிஸ்துவுக்குள்ளான புது சிருஷ்டிக்கு இந்த பிரமாணத்தின் முக்கியத்துவம் என்னவென்றால், ஏழாம் நாளின் ஓய்வு, புது சிருஷ்டி கிறிஸ்து மூலம் நுழைந்திருக்கிற பூரண இளைப்பாறுதலை நிழலாக காண்பிக்கிறது என்பதே.

கிறிஸ்துவுக்குள்ளான புது சிருஷ்டிகள் அனைவரும் ஓய்வு நாளை ஆசாரிக்க வேண்டும். அப்போஸ்தலர் கூறுவது போல, "விசுவாசித்தவர்களாகிய நாமோ இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்" - "இளைப்பாறுதலில் பிரவேசித்திருக்கிறோம்." நம்முடைய மூளையும் சரீரமும் இளைப்பாற வேண்டும் என்றல்ல இருதயத்துக்கு, உள்ளத்திற்கு எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் பெற்றிருக்கிறோம் என்பதாகும். இந்த சமாதானத்தை நாம் எல்லா சமயத்திலும் பராமரிப்பது முக்கியமானது. வேறு எதுவும் குறுக்கிட்டு தேவனுடனான இணக்கத்தை நீக்காதபடி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படி அது செய்தால், நாம் ஓய்வு நாளை கட்டளையை மீறியதாக எண்ண வேண்டும்.

புது சிருஷ்டி கொலை செய்ய முடியாது. ஆவியின் பட்டயத்தை தவிர வேறு ஆயுதம் அதற்கு கிடையாது. தன் சகோதரனை பகைக்கிறவன் ஒரு கொலைகாரன். வெறுக்கும் ஆவியை வளர்ப்பது மிகவும் ஆபத்தான காரியம். இப்படி செய்கிறவர்கள் சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு உண்மையான சகோதரானகவோ அல்லது சகோதரியாகவோ கருதப்படக்கூடாது.

**R5360**

EDITOR AT THE INTERNATIONAL PURITY CONGRESS

## சர்வதேச தூய்மை மகாசபையில் ஆசிரியர்

சில வாரங்களுக்கு முன்பு நவம்பர் 7 முதல் 12 வரை மின்னா போலிசில் நடந்த ஏழாவது சர்வதேச தூய்மை மகா சபை கூட்டத்தில் நியூயார்க் மாகாணத்தின் பிரதிநிதியாக கலந்து கொள்ளும்படி காவற்கோபுர (Watch Tower) ஆசிரியரை நியூயார்க்கின் கவர்னர் கிளின் (Glynn) அவர்கள் நியமித்தார்.

நாங்கள் தூய்மை மகா சபை கூட்டத்தில் கலந்து கொண்டு அங்கே அநேக உயர்ந்த மனிதர்களையும் பெண்மணிகளையும் சந்தித்தோம். அவர்கள் மனுக்குலத்தையும் அச்சுறுத்தும் அளவுக்கு வேகமாக பரவுகிற பல்வேறு வகையான வியாதிகள் மற்றும் துன்மார்க்கம் போன்றவைகளையும் ஒழிக்க தீவிரமாக போராடுகிறார்கள்.

நவம்பர் 9ந்தேதி ஞாயிற்றுக்கிழமை சர்வதேச வேத மாணவ ஐக்கிய சபை உள்ளூர் வகுப்பின் கீழ் பேசுவதற்கு தூய்மை மகா சபை கமிட்டி மின்னாபோலிசில் ஸ்கூபெர்ட் அரங்கத்தில் நியமிக்கப்பட்டோம். அரங்கம் நிறைந்திருந்தது. நமது தலைப்பு "பாவத்தின் சம்பளமும் தூய்மையின் பரிசும்." இது "பாவத்தின சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" என்ற வசனத்திலிருந்து எடுக்கப்பட்டது. (ரோமர் 6:23)

### தேவன் மட்டுமே வெற்றியை தர முடியும்

பாவமானது உலகத்தில் அரசியல் சீர்கேடு, சரீர சீர்கேடு அல்லது வியாதி, நடத்தையில் சீர்கேடு அல்லது களங்கம் மற்றும் அவர்களது பல்வேறு கிளர்ச்சிகள் போன்ற அநேக முறைகளில் வெளிப்படுகிறது என்பதற்கு புள்ளி விவரங்களுக்கு நாங்கள் செல்லவில்லை. மனிதர்கள் உலகத்தில் ஏன் பாவம் செய்யும் குணத்துடன் பிறக்கிறார்கள் என்பதற்கான காரணத்தை ஆழமாக ஆராய முயற்சித்தோம். பாவத்திற்கான மூலத்தை கண்டுபிடித்த பிறகு அதற்கான தீர்வை நாங்கள் விவாதித்தோம். நல்ல மனிதர்கள் ஏன் பாவத்திற்கு எதிராகவும் அதை ஒழிக்கும் முயற்சியிலும் ஒன்று சேர வேண்டும் என்பதையும் குறிப்பிட்டோம். உலக சஞ்சீவி எதுவும் உண்மையிலேயே குணப்படுத்த முடியவில்லை என்பதை அனுபவம் நிரூபித்திருக்கிறது.

அந்த பாவத்தை, களங்கத்தை காணவும், மற்ற இடங்களிலும் மற்ற வடிவங்களிலும் பரவாமலிருக்க மனுக்குலமானது தொடர்ந்து போராட வேண்டும். அது தீயையோ, கொள்ளை நோயையோ கட்டுப்படுத்துவதைப் போன்றது. போராட்டத்தை நிறுத்துவது என்பது ஜெயங்கொள்ளுவதாகும். தூய்மைக்கான போராட்டத்தின் நடுவிலே நிரந்தரமான கண்காணிப்பு அவசியம். அப்பொழுது தான் கொஞ்சமாவது பலன் இருக்கும். தேவனுடைய

பக்கத்திலிருந்து தூய்மைக்கான போராட்டத்தை பற்றி அறிவது மிகவும் ஆவலானதாக இருக்கிறது. அவர் ஏற்ற காலத்தில் ஏற்ற வழியில் வந்து, நம்மை காப்பாற்றி முழு வெற்றியை தந்தருளுவார். ஆகையால் வெற்றி முழுமையடையும், இனி அழுகையும் கூக்குரலும் மரணமும் இராது; துக்கமும் வலியும் இராது. ஏனெனில் இனி பாவமுமிராது, தூய்மையற்றதும் இராது, பரலோக நிலைமைகள் பூமிக்கு வரும். பிறகு அது உலகளாவிய பரதீசாக இருக்கும். (ஏசாயா 35)

இந்த நிலைமையின் கண்ணோட்டம் மிகவும் பிரபலமான பரிணாம தத்துவத்திற்கு தலைகீழானது என்பதை ஏற்றுக்கொண்டோம். நமது நாட்களின் பொருட்கள் மற்றும் அறிவின் ஆச்சரியமான ஆசீர்வாதங்களை சிந்திக்கும் ஜனங்கள் அதிகமதிகமாக உணர்ந்து வருகிறார்கள். சரீர பிரகாரமாகவும், அறிவின் பிரகாரமாகவும் பொதுவாக முன்னேற்றம் அடைகிற தகுதியானவர்கள் மட்டும் ஜீவிப்பார்கள் என்கிற கொள்கையை ஆதரிப்பதில்லை. அதன் போக்கு கீழ்நோக்கி இருக்கிறது. இயலாமை, பித்து பிடித்த நிலை, தார்மீக சீரழிவு பெருகிக்கொண்டிருக்கிறது. விசேஷமாக பணக்கார மற்றும் படித்த குடும்பங்களில் வெளிப்படுகிறது. நமது நாளின் முன்னேற்றம் தேவனுடைய அங்கீகாரம் பெற்றதாக இருக்க வேண்டும். நீண்ட நாட்களாக வாக்குத்தத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவின் ராஜ்யமாகிய புது யுகத்தின் தொடக்க விழாவை ஆரம்பிப்பதாக கருதப்பட வேண்டும்.

## தேவன் பொறுப்பல்ல

வேதாகமம் மட்டுமே தற்கால நிலைமையை விளக்குகிறது. ஏன் அநேகம் வழி தவறி போகின்றன என்பதை வேதாகமம் மட்டுமே நமக்கு கூறுகிறது. குழந்தைகள் தீய ஒழுக்கக்கேடான உணர்வுகளோடு பிறந்து, அவர்களும் சமூகமும் அதற்கெதிராக தொடர்ந்து போராட வேண்டும். சங்கீதம் 51:5இல் நாம் வாசிப்பதாவது: “இதோ நான் துர்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.” இங்கேயே அதற்கு விளக்கம் இருக்கிறது. பாவத்தை நோக்கிய போக்கை நாம் மரபு உரிமையாக பெறுகிறோம். சிலர் அதை மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக பெறுகிறார்கள். சிலர் பெற்றோர்களின் பொறுப்பையும் புனிதத்தன்மையையும் உணர்ந்திருக்கின்றனர். சில பெற்றோர்கள் மட்டுமே தங்களது குழந்தைகளின் நடத்தைக்குரிய மற்றும் சரீர பிரகாரமான தேவைகள் என்ன என்பதை அறிந்திருக்கிறார்கள். அவர்கள் பிறந்த பிறகு பயிற்சி கொடுப்பது மாத்திரமல்ல, கர்ப்பம் தரித்து கர்ப்பப்பையில் வளரும் போது குணலட்சணங்களுக்கு பெற்றோர்களே பொறுப்பு என்பதையும் சிலரே அறிந்திருக்கிறார்கள்.

நாம் சொன்ன கருத்திலிருந்து, எந்த குழந்தையையும் சரீர பிரகாரமாகவும், மனத்தளவிலும், குணலட்சணத்திலும் பூரணமாக பிறப்பிக்க முடியும் என்று யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. பாவம் மற்றும் சீரழிவின் விதைகள் நமது பெற்றோர்களுக்கு மிகவும் நீண்ட காலத்துக்கு முன்பே விதைக்கப்பட்டன. சரீர பிரகாரமான ஒத்த தன்மை தாத்தாவிடமிருந்து பேரப்பிள்ளைக்கு தொடருகிறது. அதே போல குணநல பண்புகளும் போக்குகளும் இரத்தம் மற்றும் சீர்மையின் அழுக்குகளும் தொடருகின்றன. வேதாகமம் நம்மை முதல் மனிதன் மற்றும் முதல் ஸ்திரீயின் காலத்துக்கு எடுத்துச் சென்று, அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியாததையும், அவர்கள் பாவிகளான போது தேவனிடமிருந்து ஐக்கியம் துண்டிக்கப்பட்டு “சாகவே சாவீர்கள்” என்ற தண்டனைக்கு கீழாக வந்ததையும் சொல்லுகிறது. அப்பொழுதிலிருந்து கீழான போக்கு ஆரம்பித்து எப்பொழுதும் இல்லாத அளவுக்கு அதிகரித்து வந்திருக்கிறது.

தேவன், மனிதனை தமது சொந்த சாயலிலும் ரூபத்திலும் பூரணமாக படைத்தார் என்று வேதம் நமக்கு கூறுகிறது. இந்த உண்மையின் உறுதிப்படுத்துதலை எவ்விடங்களிடலும் நாம் காண்கிறோம். மனிதன் விழுந்துபோய் 6000 வருடங்கள் ஆனாலும் ஒவ்வொரு மனிதனிடமோ இன்னும் கொஞ்சமும் நீதிக்கடுத்த குணங்கள் இருக்கிறது. அதிகமோ குறைவோ சிருஷ்டிகரின் குணலட்சண சாயல் பின்பற்றத்தக்கது. ஆனால் பாவிகள் அனைவரும் தேவனுடைய சாயலில் குறைவுபட்டவர்களாக, ஆரம்பத்தில் நமது இனத்திற்கு கொடுக்கப்பட்ட தெய்வீக சாயலில் குறைவுபட்டவர்களாக இருக்கிறார்கள். தேவன் அதற்கு பொறுப்பல்ல. வேத வசனங்கள் கூறுவது போல அவரது கிரியைகள் அனைத்தும் பூரணமானவை. (உபாகமம் 32:4) கீழ்ப்படியாத நம்முடைய முதல் பெற்றோர்களை தம்மிடமிருந்து பிரிப்பதிலும் தம்முடைய கிருபைக்கும் நித்திய ஜீவனுக்கும் அபாத்திரர் என்றும், “சாகவே சாவீர்கள்” என்றும் தீர்ப்பளிப்பளிப்பதிலும் தேவன் முற்றிலும் நீதியுள்ளவராயிருந்தார்.

அப்பொழுதிலிருந்தே, நமது இனம் பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையின் கீழ் இருந்து வந்திருக்கிறது. அதிகமதிகமாக பாவமானது அதிக கட்டுப்பாட்டை எடுத்துக்கொண்டது. சகல பாவங்களின் இயற்கையான போக்கும், மரணத்தை நோக்கியே இருக்கிறது. மனுக்குலமானது மருந்து மற்றும் அறுவை சிகிச்சை மூலமாக தங்களை பாவம் மற்றும் மரணத்தின் சுமையிலிருந்து விடுவித்துக்கொள்ள நாடுவது தகாததாக இருக்கவில்லை. முயற்சியானது உலகத்தில் மேன்மையான குணசாலிகளை அபிவிருத்தி செய்திருக்கிறது.

பாவம் மற்றும் மரணத்திற்கெதிரான போராட்டம் இன்னும் துன்பப்படுத்திக்கொண்டிருக்கிறது. எனினும் நமது இனத்தின் மனஞ்சார்ந்த மற்றும் உடல் சார்ந்த வியாதிகள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது, பெருகிக்கொண்டிருக்கிறது என்று மருத்துவர்கள் உணருகிறார்கள். அவர்களது ஆராய்ச்சி அறிவு மற்றும் திறமை சமாதானத்தை செயலில் கொண்டுவர முடியவில்லை. நமது தூய்மை மகா சபை அழியாமையின் திசையில் அதையே நமக்கு உறுதியளிக்கிறது. நமது முயற்சிகளை தளரவிடக்கூடாது. ஒவ்வொரு நல்ல மனிதனும் ஒவ்வொரு நல்ல ஸ்திரீயும் பாவம் மற்றும் மரணத்தின் செல்வாக்கை முடிந்தவரை ஞானமாகவும் பலமாகவும் தடுக்க எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்த திசையில் நாம் சிந்திக்கிறபடி வேலை நடந்துகொண்டிருப்பதால், பொதுவான நன்மைக்கு ஒரு உயர்ந்த ராணுவ போராட்டத்தில் நாம் சந்தோஷப்படுகிறோம். எல்லா வழிகளிலும் சீர்திருத்தலுக்கான சகல நேர்மையான உழைப்பாளிகளை நாங்கள் போற்றுகிறோம்.

## தேவனுக்கு ஆர்வமில்லையா?

மனுக்குலத்தின் நன்மைக்காக நாம் நமது ஆழ்ந்த

அக்கறையை உணரும் பொழுது, தாம் சிருஷ்டித்து நீதியாக தண்டனை கொடுத்த இந்த இனத்தின் மேல் அக்கறை இல்லாமல் இருப்பது விநோதமாக காணப்படுகிறது. தேவன் இன்னும் மனுக்குலத்தை நேசிக்கிறார் என்றும், மனுக்குலத்தை பாவம், துக்கம் மற்றும் மரணத்திலிருந்து விடுவிக்க ஒரு மகாபெரிய திட்டத்தை வைத்திருக்கிறார் என்றும் வேதாகமம் குறிப்பிடுகிறது. தெய்வீக குணங்களையும் திட்டங்களை பற்றிய போதுமான பரந்த நோக்கத்துடன் எடுக்காததால், கடந்த காலத்தில் கிறிஸ்தவர்களிடையே குழப்பம் எழுந்திருக்கிறது. தேவன் ஏன் சீர்திருத்தக்காரர்களை குறிப்பாக ஆசீர்வதிக்கவில்லை என்பதிலும் தமது வல்லமையை பயன்படுத்தி சமூகத்தின் சீர்கேடு மற்றும் தீமைகளையும் தூக்கி எறியவில்லை என்பது குறித்து ஒரு காலத்தில் நாம் ஆச்சரியப்பட்டோம். ஆனால் ஆயிர வருட காலை விடிந்து கொண்டிருக்கிறது. பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையை ஏன் தேவன் அனுமதித்திருக்கிறார் என்பதையும் இந்த இரகசியத்தை புரிந்துகொள்ளுவது ஒரு ஆசீர்வாதம் என்பதையும் வேதாகமானது விளக்குகிறது.

பாவத்தின் சம்பளத்தைக் குறித்து இருண்ட காலங்களின் விசுவாச பிரமாணத்தின் போதனை வேதாகமத்தின் போதனை அல்ல. பாவத்திற்கான பயங்கரமான தண்டனை என்றும் ஒரு காலத்தில் எண்ணிக்கொண்டிருந்தபடி நித்திய ஆக்கினை இல்லை என்றும் வேதாகம போதனை காண்பிக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம்; நித்திய ஜீவன் தேவனுடைய கிருபை வரம். அது விசுவாசிகளுக்கு கிறிஸ்து மூலமே கொடுக்கப்படுகிறது. எனவே தீயவர்கள் நித்திய ஜீவனை பெற முடியாது. “அவர்கள் அழிந்து போவார்கள்.” “துன்மார்க்கர் யாவரும் சங்கரிக்கப்படுவார்கள்.” ஆனால் துன்மார்க்கர் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது கேள்வி, எத்தனை பேர் பாவத்திலிருந்து நீதியை தேர்ந்தெடுப்பார்கள்? எவ்வளவு பேர் தவறைக் காட்டிலும் சரியானதை விரும்புவார்கள்? இது அவர்களிடையே பரவியிருக்கிற சீரழிந்த சுபாமில்லையா? மற்றவர்களிடமிருந்து சுலபமாக பாதிக்கக்கூடிய செல்வாக்கு இல்லையா?

**சாத்தான், பாவம் மற்றும் மரணம் அழிக்கப்பட வேண்டும்**

வேத வாக்கியங்களை விரிவாக கவனிக்கும் போது தேவன் தமது சிருஷ்டிகளை, சபையை மாத்திரமல்ல உலகத்தையும் ஆழமாக நேசிக்கிறார் என்று நமக்கு சுட்டிக்காட்டுகிறது. நாம் பாவிகளாக இருந்த போது அவர் மனுக்குலத்தை நேசித்தார். தேவன் ஒரு பெரிய மீட்பின் திட்டத்துடன் தொடர்ந்து கொண்டிருக்கிறார். அது பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் முழுமையாக விடுதலையடைக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை இந்த ஜீவியத்திலாவது அல்லது அடுத்த ஜீவியத்திலாவது நமது இனத்தில் ஒவ்வொருவருக்கும் கொண்டு வரும். இதற்காகவே கிறிஸ்து அனைவருக்காகவும் மரித்தார். பெந்தேகோஸ்தே காலத்திலிருந்து, மகிமையான நீதியின் ராஜ்யத்தில் இயேசுவுக்கு உடன் சுதந்தரராக இருக்கும்படி தேவன் உண்மையும் விசுவாசமுள்ள ஒரு வகுப்பாரை, ஒரு தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாரை அழைத்து, சோதித்து மெய்ப்பித்து வருகிறார். இந்த ராஜ்யம் பூமியிலே ஸ்தாபிக்கப்பட வேண்டும். அது சாத்தான் பாவம் மற்றும் மரணத்தை அழித்துப்போடுவது மாத்திரமல்ல. அந்த சமயம் கொடுக்கப்படும் சந்தர்ப்பம் மற்றும் வெளிச்சத்தின் கீழ், கீழ்ப்படிதலையும் விருப்பத்தையும் மெய்ப்பிக்கிற அனைவருக்கும் மானிட பூரணத்தன்மை திரும்ப கொடுக்கப்படும்.

இதற்கிடையில் பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகை பிரயோஜனமற்றதாகும். அது தேவனுடைய பரிசுத்தம், அவரது தேவையின் நியாயத்தன்மையும் பற்றிய மிகவும் போதனைக்குரிய பாடங்களை தூதர்களுக்கும் மனிதர்களுக்கும் கொடுத்திருக்கிறது. தேவன் வேறு யாருக்கும் வழங்கியிராத ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்கு தேவனுடைய சிருஷ்டிகள் புனிதமாகவும் பரிசுத்தமாகவும் இருக்க வேண்டும். நீதியை பற்றிய கொஞ்சம் அறிவும் உணர்வும் உள்ளவர்கள் இவற்றை உணர்கிற அளவுக்குத்தக்கதாகவும் பாவம் மற்றும் களங்கத்தின் பயங்கரமான விளைவுகளை காண்கிற அளவுக்குத் தக்கதாகவும் நீதி, தூய்மை மற்றும் சத்தியத்துக்கு ஊழியம் செய்ய விழிப்பாயிருக்க வேண்டும். ஆர்வமுள்ள கிறிஸ்துவின் சீஷர்கள் மட்டுமே அவரது ராஜ்யத்தில் அவருடன் உடன் சுதந்தரராயிருக்கக்கூடிய மாபெரும் பரிசை பெறுவார்கள் என்பதை அகில உலகமும் அறிய வேண்டும். எனினும் “மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்” என்பது உலகத்தில் உண்மையாக இருக்கிறது.

தீவிரமான பாவம் மற்றும் இழிவான நடத்தை மூலம் இந்த காரியத்தில் பிடிவாதத்தினாலும் அறிவினாலும் தங்களையும் மற்றவர்களையும் பங்கப்படுத்திக் கொள்ளுகிறார்கள். நீதியாக, தூய்மையாக, நிதானமாக வாழ நாடுகிறவர்கள் அதற்குத்தக்கதாக மற்றவர்களுக்கு அனுகூலம் செய்து தங்களை உயிர்த்தெழுதலில் உயர்ந்த இடத்திற்கு தயார்படுத்திக் கொள்ளுகிறார்கள். எல்லோரும் மரண நித்திரையில் விழுந்தாலும் ஆயிரம் வருடம் நீடித்திருக்கும் உயிர்த்தெழுதலின் மகா நாளில் எழுந்து வருவார்கள். ஆண்டவரின் சித்தமாகிய நீதியின் வழியை அறிந்த அல்லது அறியாததற்கு தக்கதாக ஏறக்குறைய அனுகூலமான நிலைமைக்கோ அல்லது ஏறக்குறைய அவமானத்திற்கும் நிந்தனைக்கும் சில அடிகள் அல்லது பல அடிகள் பெறுவதற்கும் எழுந்து வருவார்கள்.

**வேதாகம கற்றலில் ஊக்கத்தை தூண்டுதல்**

வேதாகமமானது முழுவதுமாக சரியானபடி புரிந்து கொள்ளப்பட்டால், அதன் நியாயத்தன்மை அநேகரது கவனத்தை இழுக்கும். அதன் செல்வாக்கு ஒவ்வொரு நாளும் சரீர ரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும் ஒரு ஆசீர்வாதமாக இருக்கும். நாம் அனுதினமும் வேதாகமத்தை கற்பதில் சபை பாகுபாடில்லாமல் மிகவும் ஊக்கமாக இருப்போமாக. தேவனிடம் நெருங்குவது என்பது தேவனுடைய ஆவியுடன் தொடர்புக்கு வருவது ஆகும். அது இருதயத்தில் பாவத்தின் மேல் வெற்றியை தருகிறது. இது உண்மையான கிறிஸ்தவர்களை ராஜ்யத்தில் அவர்களது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகவும் தேவனுக்கு சுதந்தரராகவும் ஆகும்போது எதிர்கால மகா வேலைக்கு ஆயத்தம் பண்ணும், அந்த ராஜ்யம் சகல மனுக்குலத்தையும் ஆசீர்வதிக்கும் அதற்காகத்தான் நாம் “உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக” என்று ஜெபிக்கிறோம்.

இதற்கிடையே எதிர்கால வேலைக்காக தயாராகிக் கொண்டு தற்காலத்தில் தங்கள் இருதயங்களில் கிருபையின் வேலையில் தேவனுக்கு உடன் ஊழியம் செய்பவர்கள், தற்காலத்தில் சகல நீதிக்கடுத்த சீர்த்திருத்தங்களில் அவர்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்திற்குத்தக்கதாக பங்கு பெறுவதில் சந்தோஷப்பட வேண்டும். அல்லது இந்த சீர்த்திருத்தங்களில் ஈடுபட்டிருக்கிறவர்களின் கைகளை தாங்கவாவது செய்ய வேண்டும். அதாவது சர்வதேச தூய்மை மகா சபையை ஆதரிக்கவாவது செய்ய வேண்டும்.

R5361

## JESUS AND THE CHILDREN
## இயேசுவும் குழந்தைகளும்

மாற்கு 9:30-41; 10:13-16

"நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்." 1 பேதுரு 5:5

நமது ஆண்டவர் தமது மரண நேரம் நெருங்கி வருகிறதை அறிந்தார். அவர் தமது சீஷர்களிடம் தகவலை மெதுவாக சொல்ல விரும்பினார். ஆகையால் நமது பாட வசனத்தில் சொல்லப்பட்டப்படி ஆவலை தடுக்கும்படி கப்பர்நாகூமுக்கு செல்ல கலிலேயாவை சீக்கிரம் கடந்தார். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, அவர் தமது பலியை சீக்கிரத்தில் நிறைவேற்ற போகிறார் என்பதை தமது சீஷர்களுக்கு கூற விரும்பினார். அவர் ஏற்ற வேளை இன்னும் வராததால், என்னை யாரும் தொட முடியாது என்று கூறியிருந்தார். இப்போது அவர் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றும், அவர்கள் அவரைக் கொன்றுபோடுவார்கள் என்றும், கொல்லப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்தெழுவார் என்றும் அறிவித்தார்.

ஆனால் சீஷர்கள் அதை அறிந்து கொள்ளாததினால் அதைக் குறித்து அவரிடம் கேட்க பயந்தார்கள். அவர்கள் சுபாவ மனிதர்களாகவே இருந்தார்கள். பெந்தெகொஸ்தே நாள் வரை அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவில்லை. (யோவான் 7:39; அப்போஸ்தலர் 1:8) ஆனால் யூதர்களாக மேசியாவின் ராஜ்யத்தைக் குறித்த எண்ணத்தை தங்கள் இருதயங்களில் பெற்றிருந்தார்கள். ராஜ்யம் சமீபமாயிருக்கிறது என்று போதிக்க இயேசு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். ராஜ்யத்தில் அவர்களுக்கும் ஒரு பங்கை வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். யூத தேசம் அவரை ஏற்றுக்கொள்ளாது என்பதையும் ஆகையால் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் நூற்றாண்டு காலங்கள் தள்ளிப் போகும் என்கிற காரியத்தையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள இப்போது தயாராக இல்லை.

இயேசு கூறியிருந்த பல "கருகலான உபதேசங்களையும்" உவமைகளையும் அப்போஸ்தலர்கள் கேட்டிருந்தனர். அவரது மரணம் மற்றும் உயிர்தெழுதலைக்குறித்து என்ன விளக்கத்தை கொடுப்பார் என்று நினைத்து குழம்பியிருந்தனர். இயேசு சீக்கிரத்தில் ராஜாவாக ஆவார். அந்த ராஜ்யத்தில் தங்களுக்கு கனத்துக்குரிய இடத்தை பெறுவோம் என்று அவர்களுக்கு முன்னே இருந்த மாபெரும் நம்பிக்கைகள் அவர்களது மனதில் இயற்கையாகவே சலனமடைந்தது. அவர்கள் இதற்கும் மேலாக சென்று, தங்களுக்குள் யார் பெரியவனாக இருப்பான், உயர்ந்த ஸ்தானத்தை பெறுவான் அதாவது கர்த்தரின் பிரதம மந்திரியாக இருப்பான் என்று தர்க்கம் பண்ணினார்கள். ஆகையால் சில நாட்களுக்குள் நடக்கவிருக்கிற பெரிய சோதனைகளையும் ஏமாற்றங்களையும் புரிந்து கொள்ளவில்லை!

இயேசு அவர்களை கூட்டிச் சேர்த்து அவர்கள் தர்க்கப்பண்ணினதைக் குறித்து விசாரித்தார். அவர்கள் எதைக் குறித்து பேசினோம் என்பதை சொல்ல வெட்கப்பட்டார்கள். பிறகு அவர் ஊழியத்தைக் காட்டிலும் கனத்தை தேடுகிற சுயநல ஆசை ஏமாற்றத்தை கொடுக்கும் என்று புத்திமதி கூறினார். அவருடைய ராஜ்யத்தில் சுயநலத்தை நாடுகிறவர்கள் கீழான இடத்தை பெறுவார்கள். இந்த காரியத்தை விளக்கும்படி ஒரு குழந்தையை எடுத்து அவர்கள் நடுவே நிறுத்தி அவர் கூறியதாவது: "இப்படிப்பட்ட சிறு பிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான். என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை (மாத்திரம்) அல்ல, என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்றார்."

தங்களது சொந்த மகிமையை கவனிப்பதைக் காட்டிலும் தேவனுடைய தயவைப் பெற வேண்டும் என்று தமது சீஷர்களுக்கு ஆண்டவர் காண்பிக்க நாடினார். அவர்களில் தாழ்மையான ஒருவன், தேவனால் தயவு பெற்றால் உயர்ந்த இடத்தை அடைவான். அவர்கள் ஒருவருக்கொருவர் தயவின் ஆவியையும், கிருபையான தெய்வீக வேலைகளில் பாராட்டுதலினால் பெற வேண்டும். அவர்கள் ஒருவருக்கொருவர் இயேசுவின் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்னும் பிதாவின் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் இந்த கருத்துக்களை ஒருவருக்கொருவர் வரவேற்றால் அவர்கள் நிச்சயமாக எல்லாரிடமும் அன்பும் தயவும் உள்ளவர்களாக இருந்து, "ஒருவருக்கொருவர் கனம் பண்ணுவதில்," உதவிகரமாயிருக்க நாடுவார்கள்.

### குழந்தைகளை ஆசீர்வதித்தல்

பதிவுகளின்படி பெரிய போதகர் குழந்தைகளுக்கு நேரம் ஒதுக்காமல் இருந்தாலும் கூட குழந்தைகளிடம் அன்புடையவராக இருந்தார். தங்கள் பிள்ளைகளை ஆசீர்வதிக்கும்படி பெற்றோர்கள் அவரிடம் கொண்டு வரும் போது, சீஷர்கள் கர்த்தரின் நேரம் மிகவும் மதிப்புமிக்கது என்று உணர்ந்து அவர்களை கண்டிப்பார்கள். ஆனால் இயேசு மிகவும் ஆர்வத்துடன் குழந்தைகளை தம்மிடம் வர அனுமதிக்கும் படி அவர்களிடம் அறிவுறுத்துவார். அவர்களை தம்முடைய கைகளில் எடுத்து அவர்கள் மீது தமது கைகளை வைத்து ஆசீர்வதித்து தமது தயவான அன்பை, இருதய கருணையை காண்பித்தார். அவர் ஒரு சமாரிய ஸ்தீரியிடம் போதிக்கவும் அல்லது குழந்தைகளை கொஞ்சவும் நேரம் ஒதுக்கினார். தம்மேல் இருக்கும் ஊழியத்தின் சுமையையும் தமது ஓட்டம் முடியப்போகிறது என்பதையும் அறிந்தும் நேரம் ஒதுக்கினார்.

ராஜ்யத்தைப் பற்றிய பாடம் அவரது போதனைகளிலும் அவரது சீஷர்களின் மனதிலும் முதன்மையானதாக இருந்த போதிலும் ஒருபாடத்தை கற்பிக்க இன்னும் ஒரு சந்தர்ப்பத்தை அவர் எடுத்துக்கொண்டார். ராஜ்ய வகுப்பாரில் அங்கங்களாக இருக்கிறோம் என்று உறுதியாக உணர்ந்திருந்தார்கள். இரட்சகருடன் மேசியாவின் மகிமையின் சிங்காசனத்தில் உட்காரவும் பூமியிலுள்ள வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிப்பதில் அவருடன் பங்கு பெறவும் பாத்திரராக எண்ணப்படுவதற்கு முக்கியமான சோதனைகள் என்னென்ன கொடுக்கப்படும் என்பதை இன்னும் கற்றுக் கொள்ளாதிருந்தார்கள். ஆகையால் அவர் சொன்னதாவது: "சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களை தடை பண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது."

இந்த வார்த்தைகளைக் கொண்டு, ஆண்டவர் வழக்கமாக பிரசங்கங்களை கொடுத்து வரும் அவரது சீஷர்கள் பரலோக ராஜ்யத்தில் இருக்க மாட்டார்கள் என்று புரிந்து கொள்ளக்கூடாது. அப்படியானால் ராஜ்யத்தில் குழந்தைகள் மட்டுமே இருப்பார்கள். இதற்கு மாறாக ராஜ்யத்தில் குழந்தைகள் இருக்கவே மாட்டார்கள். அபிவிருத்தி அடைந்து, சோதிக்கப்பட்டு, குணலட்சணத்தில் பரிபூரணம் அடைந்தவர்கள் மட்டுமே ஆண்டவருடன் அவருடைய சிங்காசனத்தில் உட்காரும் ஜெயங்கொண்டவர்களாயிருப்பார்கள்.

இங்கே நமது கர்த்தர் அறிவுறுத்தும் கருத்து என்னவென்றால், வேறு இடத்தில் சொல்லப்பட்டிருப்பது போல

அவரது பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் குழந்தைகளைப் போல, கற்பிக்கப்படக் கூடியவர்களாக, இணக்கமான -வர்களாக, நம்பகமானவர்களாக இராவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கமாட்டார்கள் என்பதாகும். சரியான குழந்தை, அதன் மூத்தவர்களால் கெடுக்கப்படாதிருந்தால் மிகவும் நம்பிக்கையுடையதாக அனுப்பப்படலாம். அது ஏமாற்றப்படும் வரை, பெற்றோர்களின் ஒவ்வொரு வார்த்தையையும் நம்பும்; பெற்றோர்களின் ஞானத்தையும் சக்தியையும் மறைமுகமாக நம்பும். தேவனுடைய பிள்ளைகளாக ஆகும் அனைவரும் பரலோக பிதாவைப் பொருத்தவரை இந்த இருதய நிலையை அடைய வேண்டும். இந்த நிலைமையை அடையாத யாரும் தேவனுடைய ராஜ்யத்துக்கு தகுதியுள்ளவர்களாக ஆக மாட்டார்கள்.

இந்த பாடத்தை இன்னும் வலியுறுத்தி மாபெரும் போதகர் கூறியதாவது: "எவனாகிலும் சிறு பிள்ளையைப் போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லை." இந்த கூற்று பொருளை விளக்குகிறது. இயேசுவின் சீஷர்கள் குழந்தைகளாக இருக்கக்கூடாது, குழந்தைகளைப்போல ஆக வேண்டும், ஏனெனில் குழந்தைகளைப் போல இருக்கும் சீஷர்கள் மட்டுமே தேவனுடைய ராஜ்யத்தில் பங்குபெறுவார்கள். ராஜ்யத்தை பெறுதல் என்பது ராஜ்யத்தின் செய்தியை ஏற்றுக்கொள்ளுதல் என்று வெளியரங்கமாக பொருள்படுகிறது. ஏனெனில் ராஜ்யம் வரும் வரை அல்லது கொடுக்கப்படும் வரை ஒரு ராஜ்யத்தை யாரும் வெளியரங்கமாக பெற முடியாது.

இப்படியாக யூத தேசத்துக்கும் இருந்தது; இயேசுவின் ஊழியத்தின் முடிவில் ராஜ்யத்தின் அழைப்பு கொடுக்கப்பட்டது. அவர் கழுதையின் மேல் ஏறி எருசலேமுக்குள் சென்று இஸ்ரயேலின் ராஜாக்களைப் போல தம்மை அவர்களுடைய ராஜாவாக காண்பித்தார். உலகப் பிரகாரமான வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவை ஏற்றுக்கொள்ள அதிகமான ஞானிகளாயிருந்து அவரை கொல்ல திட்டமிட்டனர். அவரது சீஷர்கள் குழந்தைகளைப் போல நம்பிக்கை உடையவர்களாக இருந்து, ஒரு ராஜ்யம் இருக்கும் என்றும் அதில் இயேசு நியமிக்கப்பட்ட ராஜாவாக இருப்பார் என்றும், அவர் ஏற்ற காலத்தில் உலகத்தை ஆசீர்வதிக்க வல்லமையையும் ஆளுகையையும் எடுத்துக்கொள்வார் என்கிற தேவனுடைய வார்த்தையின் செய்தியை முழுவதுமாக நம்பினார்கள்.

இயேசு கழுதையின் மேல் உட்கார்ந்த போது இது விளக்கப்பட்டது. திரளான ஜனங்கள் அவரை ஒரு ராஜாவாக கருதி, "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினால் வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" என்று ஆர்ப்பரித்தார்கள். சீஷர்கள் குழந்தைகளைப் போல எந்த ஒரு சந்தேகமும் அடையாமல் பூரணமாக ஒத்துக்கொண்டனர். இன்னொரு வகையில் "ஞானமான வேதபாரகரும் பரிசேயரும்" ஜனங்கள் ஆர்ப்பரித்ததை நிறுத்தும்படி கூறினார்கள். இயேசு, மேசியா இல்லை, அவர்கள் வஞ்சிக்கப்பட்டார்கள் என்று அவர்களுக்கு சொல்ல வேண்டும். தீர்க்கதரிசி சகரியாவினால் முன்னறிவிக்கப்பட்டபடி அவர்கள் கண்கூடாக பார்த்தார்கள் என்று இயேசு பதிலளித்தார். (சகரியா 9:9) ஜனங்கள் ஆர்ப்பரிக்காவிட்டால், தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி கல்லுகள் ஆர்ப்பரிக்கும் என்று கர்த்தர் அறிவித்தார். (லூக்கா 19:40)

மேசியாவின் ராஜ்யம் மற்றும் இஸ்ரயேலும் பூமியின் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவது நிறைவேறுவதைப் பற்றியும் வேதாகமம் குறிப்பிடுகிறவைகளை சிலர் மட்டுமே நம்புவதாகவும் சிலர் மட்டுமே குழந்தைகளைப் போல ஏற்றுக்கொள்ள விரும்புவதாகவும் காணப்படுகிறது. இன்றைக்கு பெரும்பாலானவர்கள் அந்தக்கால வேதபாரகர் மற்றும் பரிசேயர்களைப் போல மிகவும் "ஞானிகளாக" மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் சாத்தியத்தை நம்ப மறுக்கிறார்கள். ராஜ்யத்தின் அவசியத்தை அவர்கள் உணர்ந்தும், அவர்களது சில சொந்த கொள்கைகள் அவர்களை சத்தியத்திலிருந்து குருடாக்கியிருக்கிறது.

சிலர் கிறிஸ்துவின் ராஜ்யம் உலகத்தை ஜெயங்கொண்டு பெந்தெகொஸ்தே நாளிலிருந்தே, ஸ்தாபிக்கப்பட்டு அவர் ஆளுகை செய்து வருகிறார் என்று தவறாக நினைக்கிறார்கள். ஐயோ, இது எவ்வளவு நியாயமற்றதாக காணப்படுகிறது! இது புறஜாதியார்களுக்கு மிகவும் சாதகமான காலமாக இருக்கிறது என்பதை நாம்அறிவோம். நீண்ட காலமாக சில கிறிஸ்தவர்கள், தேவனுடைய ராஜ்யம் வர வேண்டும், உலகை ஆளுகை செய்ய வேண்டும், துன்மார்க்கரை அழித்து, கீழ்ப்படிகிறவர்களை உயர்த்தி, முடிவாக தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்பட வேண்டும் என்று ஜெபிப்பது எவ்வளவு விநோதமாக இருக்கும்! உண்மையாகவே ராஜ்யம் இஸ்ரயேலருக்கு கொடுக்கப்பட்டது, அதை அவர்கள் மறுத்துவிட்டார்கள். அது வெளியரங்கமாக இயேசுவின் இரண்டாம் வருகையில் ஸ்தாபிக்கப்பட்டு, அவரது சபையும் உயிர்த்தெழுதலில் மறுரூபமடையும் என்று சரியாக நம்புகிறோம்.

இன்னொரு பெரிய கிறிஸ்தவ சபையாகிய ரோமன் கத்தோலிக்கர்கள் ஒரு மாறுபாடான கோட்பாட்டை பெற்றிருக்கிறார்கள். அதாவது, மேசியாவின் ராஜ்யம் போப் மூன்றாம் லியோவின் காலத்தில் கிபி 800இல் ஆரம்பித்து அதிலிருந்து உலகை ஆளுகை செய்து வருகிறார் என்று நம்புகிறார்கள். இந்த கருத்து அவரது ராஜ்யத்தை ஸ்தாபிக்க இயேசு இரண்டாம் வருகையில் வருவது அவசியம் என்பதை பற்றிக்கொள்ளுகிறது. ஆனால் கிபி 800இல் இயேசு தமது சீஷர்களை ராஜரீக அதிகாரத்தில் வைத்து, ரோமாபுரியில் இருந்த போப்பை தமது பிரதிநிதியாக, பதிலதிகாரியாக நியமித்தார். பதிலதிகாரி என்பது நாமனைவரும் அறிந்திருக்கிறது போல் ஒருவருக்காக இன்னொருவர் ஆளுகை செய்வது ஆகும். இயேசு ஆயிரத்தி நூற்றி பதிமூன்று வருடங்கள் ஆளுகை செய்து வருகிறார் என்பது அவர்களது உரிமை கொண்டாடுவதாக இருக்கிறது. இது முழுமையாக போப்பை குறிக்கிறது.

இது திருப்திகரமானதாகவோ, வேதத்தின்படியோ இல்லை. கடந்த ஆயிரத்தி நூறு வருடங்களாக உலகத்தை ஜெயங்கொள்ளுதல் நடைபெற்றுக் கொண்டிருக்கவில்லை. நாம் நம்பிக்கை கொண்டிருந்தது போல, நீண்ட காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ராஜ்யத்தை எடுத்துக்கொள்ள மேசியாவுக்கு தேவனுடைய ஏற்ற காலம் வந்திருக்கவில்லை. நிச்சயமாக பரிசுத்த பவுல் அவர் காலத்தில் சொன்னது இப்பொழுதும் உண்மையாக இருக்கிறது. "கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி பிரகாசமாயிராதபடிக்கு (விசுவாசியாதபடிக்கு) இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்." -"கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்!

கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷமாவது: “நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.” அவரது சபை அவரது சிங்கசானத்தில் அவருடன் ராஜரீக ஆசாரியர்களாக உட்காருவார்கள் என்பது அவரது மகிமையான செய்தியாக இருக்கிறது. மேலும் அவரது நாளில் நீதிமான்கள் செழிப்பார்கள். துன்மார்க்கர் அனைவரும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். “பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தை”விட்டு விலக வேண்டாம் என்று அப்போஸ்தலர் நம்மை நன்றாக எச்சரித்தார். அநேகர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் என்று அப்போஸ்தலரால் போதிக்கப்பட்டோம். (1தீமோத்தேயு 4:1) தேவனுடைய மகிமையான அன்பின் சுவிசேஷத்தையும் என்றென்றைக்கும் இருக்கும் அவரது இரக்கத்தையும் அவர்கள் முற்றிலுமாக வெறுப்பார்கள்.

ஏற்ற காலத்தில் கிறிஸ்துவின் சிங்கசானத்தில் உட்காருவதற்கு இப்பொழுது அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிற நாம், ஒருவருக்கொருவர் ஊழியர்களாக மனத்தாழ்மையை அணிந்து கொள்ள வேண்டும் என்ற நமது தலைப்பு நமக்கு கூறுகிறது. ஏனெனில் பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால் தாழ்மையுள்ளவர்கள் மட்டுமே மகா பரிசாகிய ராஜ்ய மகிமையையும் சந்தர்ப்பங்களையும் பெறுவார்கள்.

**R5362**

## SEVENTY MINISTERS ORDAINED

## எழுபது ஊழியர்கள் நியமிக்கப்பட்டார்கள்

லூக்கா 10:1-24

“பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்.”மத்தேயு 10:20

ஊழியர்களின் நியமனம் என்பது நூற்றாண்டு காலமாக ஒரு விவாதக்குரியதாகவே இருந்து வந்திருக்கிறது. கடந்த காலங்களில் அது மறைமுகமாக கொடூரமான துன்புறுத்தல்களுக்கு வழி நடத்தியிருக்கிறது. பெரும்பாலான கிறிஸ்தவர்களைப் பொருத்தவரை அந்த காலங்கள் கடந்து போய் விட்டன. தேவனுக்கு நன்றி! இன்னும் பெரும்பாலான ஜனங்கள் இந்த நியமனம் பற்றிய காரியங்களை தெளிவாக புரிந்துகொள்ளாததால் துன்புறுத்தல்கள் மறுபடியும் வருகின்ற ஆபத்து எப்பொழுதும் இருக்கிறது. பிரிஸ்பைட்டேரியன், பேப்டிஸ்ட்டுகள், லூத்தரன் சபையினர், எபிகோபல் சபையினர் அனைவரும் ஊழியர்கள் நியமனம் குறித்து தவறான கருத்துகளின் அடிப்படையில் துன்புறுத்தல்களில் பங்கு பெற்றிருக்கின்றனர். இந்த காரியத்தில் ஒருவருக்கொருவர் துன்புறுத்தியுள்ளனர்.

ஒருவருக்கு விசேஷித்த நியமனம் இல்லையென்றால் அவர் போதகராகவோ பிரசங்கியாகவோ ஆக முடியாது என்பதும் நியமனம் பெறாமல் போதிப்பதும் பிரசங்கிப்பதும் தெய்வீக ஏற்பாட்டிற்கு எதிராக கலகஞ் செய்வதாகும் என்பதும், இப்படியாக நியமனம் பெறாமல் போதிப்பவரின் போதனையை பின்பற்றுகிற அல்லது அவரது ஆதரிப்பவர்கள் அனைவரும் சமய பேதமுள்ளவர்கள் என்றும் கருதப்பட்டு, அனுதாபத்திற்கு உரியவர்களாக கருதப்படாமல் துன்புறுத்தலுக்கு பாத்திரராக இருப்பார்கள் என்பதும் அவர்களது வாதமாக இருந்தது.

அநேகர் கருதுவது போல, நியமனம் என்பது ஒரு சடங்காச்சாரமோ, ஒரு முறைமையோ கிடையாது. அது பிரசங்கிப்பதற்கான ஒரு அதிகாரத்தை, ஒரு வேலையை ஒப்படைத்தலை குறிக்கிறது. பேப்படிஸ்ட்கள் தங்களது விசுவாச பிரமாணத்தை ஏற்றுக்கொள்ளுகிறவர்களை பிரசங்கிக்க அனுமதிக்கிறார்கள். லூத்தான், மெத்தடிஸ்ட் முதலான சபைகளைப் போல பிரிஸ்பட்டேரியன் சபையாரும் தங்களது சீஷர்களுக்கு போதிக்கும் வேலையை ஒப்படைக்கிறார்கள். ரோமன் கத்தோலிக்க சபையாரும் எபிகோபல் சபையாரும் அது தேவனிடமிருந்து வருகிற நியமனம் என்று கூறுகிறார்கள். அதாவது அவர்களது பிஷப்புகள் அனைவரும் அப்போஸ்தலரின் வழி வந்தவர்கள் என்றும் அப்போஸ்தல அதிகாரத்தை பெற்றவர்கள் என்றும் கூறுகிறார்கள். ஆகையால் அவர்களது பிஷப்புகளால் ஊழியம் ஒப்படைக்கப்படாதவர்களோ அல்லது நியமனம் பெறாதவர்கள் போதிக்க உரிமை இல்லாதவர்கள் அல்லது மத கொள்கைகளுக்கு எதிரானவர்கள் ஆகும். அவர்களுடைய கருத்தின்படி மற்ற புரட்டஸ்டன்ட் சபையார் அனைவரும் போதிக்க அதிகாரம் இல்லாதவர்கள் அல்லது மத கொள்கைகளுக்கு விரோதமானவர்கள்.

ஆனால் விட்டுக்கொடுக்கும் ஆவி வளர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த இரண்டு வருடங்களில் எபிகோபல் சபையினர் மற்ற புரட்டஸ்டன்ட் சபையின் மேலுள்ள தடையை நீக்கி, எபிகோபல் சபையின் ஊழியர் மற்ற சபை பிரிவின் மேடையில் நின்று பிரசங்கம் பண்ணலாம். அல்லது எபிகோபல் சபையினால் நியமனம் பெறாத ஊழியர் எபிகோபல் சபையின் மேடையில் நின்று பிரசங்கம் பண்ணலாம். எனினும் இது நவீன காலத்துக்குரிய சலுகையாக இருக்கிறது.

இன்றைய பாடத்தில் நியமனத்தின் சரியான கருத்து கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு முன்னரே பன்னிரண்டு பேரை அவரது விசேஷித்த அப்போஸ்தலர்களாக நியமித்திருந்தார். இப்போது இன்னும் எழுபது பேரை அப்போஸ்தலர்களாக அல்ல, பொதுவான ஊழியக்காரர்களாக நியமனம் செய்தார். பதிவுகளின்படி பார்க்கும் போது, அவர்களது நியமனத்திற்காக எந்தவித சடங்காச்சாரமும் இல்லை. என்ன சொல்ல வேண்டும் என்பதை மட்டும் அவர்களிடம் கூறி அவர்களை அனுப்பி வைத்தார். நமது தலைப்பு வசனம் காரியத்தை இவ்விதமாக விளக்குகிறது: “பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்களின் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்.” (மத்தேயு 10:20)

சரியாகச் சொல்ல வேண்டும் என்றால், அப்போஸ்தலர்கள் அதுவரையில் நேரடியாக பிதாவானவரின் ஆவியை பெற்றுக் கொள்ளவில்லை. பிதாவின் ஆவி குமாரனுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. குமாரன் தமது நாமத்தினால் போதகம் செய்ய அனுப்பப்பட்டவர்களுக்கு தமது ஆவியை பகிர்ந்தளித்தார். பெந்தேகோஸ்தே நாள் வரையிலும் பிதா சுவிசேஷ செய்தியை போதிக்க யாரையும் நேரடியாக நியமனம் செய்யவில்லை அல்லது அதிகாரம் கொடுக்கவில்லை. பிதாவிடமிருந்து, குமாரன் மூலமாக பரிசுத்த ஆவியானது சீஷர்களுக்கு பொழியப்பட்டது குறித்து பரிசுத்த பேதுரு விவரிக்கிறார். (அப்போஸ்தலர் 2:32-33)

இயேசு இன்னும் மகிமையடையாததினால் பரிசுத்த ஆவி முன்பு கொடுக்கப்படவில்லை என்று வேறு ஒரு இடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இயேசுவுக்கு பாடுபடுவதும், பரலோகத்துக்கு ஏறி, அவரது சீஷர்களின் சார்பாக தமது புண்ணியத்தை பரலோக பிதாவின் முன்பாக சமர்ப்பித்து, அவர்களை புது ஒழுங்கின் பிள்ளைகளாக அங்கீகரித்தன. பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பது அவசியமாயிருந்தது. அவர்கள் உலகில் அவரது ஸ்தானாபதிகளாகவும் பிரதிநிதிகளாகவும் இருக்கும்படி பரிசுத்தராலே அபிஷேகம் பண்ணப்படவும், அதிகாரம் அளிக்கப்படவும் அல்லது நியமிக்கப்படவும் வேண்டும். அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தால், சாபத்தை நீக்கிப்போட்டு பூமியை ஆசீர்வதிக்க ஆயிரம் வருடங்கள் பரலோக

ராஜ்யத்தில் இயேசுவின் உடன் அங்கங்களாக விரைவில் இருப்பார்கள்.

குமாரத்துவத்தின் பரிசுத்த ஆவியை கொடுத்து தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள் மட்டுமே, கர்த்தரின் நாமத்தில் போதிக்க கட்டளை பெற்றவர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்டவர்கள் ஆகும். பூமியிலுள்ள சகல சடங்கச்சாரங்களும், சகல பிஷப்புகளின் அனைத்து கைகளும் தேவனுடைய நாமத்தில் பேச யாருக்கும் அதிகாரம் கொடுக்க முடியாது. நமது கர்த்தராகிய இயேசு தேவனுடைய நியமனத்தைப் பெறும் வரை தமது ஊழியத்தை ஆரம்பிக்க வில்லை. அவரது அர்ப்பணம் மற்றும் ஞானஸ்நானத்தின் போது, சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும், இருதயம் நொருங்குண்டவர்களுக்கு காயங்கட்டுதலையும், கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தை கூறவும், துயரப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்யவும், பரிசுத்த ஆவி அவர் மேல் வந்து அவரை அபிஷேகம் பண்ணி, அர்ப்பணித்து, அதிகாரம் அளித்தது. (ஏசாயா 61:1,2)

இதே பரிசுத்த ஆவிதான், அதை பெற்றுக்கொண்டிருக்கிற -வர்களுக்கு, கேட்க காதுள்ளவர்களுக்கும், விசேஷமாக சிறுமைப்பட்டவர்களுக்கும், இருதய நொருங்குண்டவர் -களுக்கும், தேவனைக் குறித்த உணர்வுள்ளவர்களுக்கும் தேவனுடைய திட்டத்தில் அவர்கள் அறிந்திருக்கிற அனைத்தையும் சொல்ல அதிகாரம் இருக்கிறது. சபையின் பெண் அங்கங்கள் பொது இடங்களில் பிரசங்கிக்கூடாது என்று அப்போஸ்தலர் பவுல் குறிப்பாக கூறியிருந்தாலும் இது பரிசுத்த ஆவியை பெற்றிருக்கும் அனைவருக்கும் (ஆண், பெண்) அவர்களது பால் இனத்தை பொருத்து வரம்புகள் மற்றும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பிரசங்கிக்கவும் போதிக்கவும் அதிகாரத்தை பெற்றிருக்கிறார்கள் என்ற உண்மையில் தலையிடுவதில்லை. சில சமயங்களில் தனிப்பட்ட முறையில் பண்ணும் போதகங்கள் பொதுவிடங்களில் பண்ணப்படுவதற்கு ஒத்த பலனைக் கொடுக்கிறது.

யோவான் ஸ்நானன் தொடங்கி, எருசலேம் அழிக்கப்படும் கிபி70வரை யூத யுகத்தை நிறைவு செய்த 40 வருடங்களானது நிழலான இஸ்ரயேலர்களுக்கு அறுவடை காலம். இதில் உண்மையான கோதுமை அனைத்தும் சுவிசேஷ களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டு, மீதியுள்ள பதர் அனைத்தையும், அக்கினி என்று அடையாளமாக அழைக்கப்படும் மகா உபத்திரவத்திற்கு ஒதுக்கப்பட்டது. இதே போல சுவிசேஷ யுக முடிவில் ஒரு அறுவடை இருக்கும் என்று கர்த்தர் மத்தேயு 13ஆம் அதிகாரத்தில் அறிவிக்கிறார். அநேகர் இது 1874இல் ஆரம்பித்து 1915ல் முடிவடையும் என்று நம்புகிறார்கள். (ஆனால் அறுவடை 1915ல் முடிவடையவில்லை என்று பிற்கால கட்டுரைகளில் சகோ.ரசல் எழுதியிருக்கிறார்).

யூத யுக முடிவில் கர்த்தருடைய விசுவாசிகள் அனைவரும் அறுவடை வேலையில் ஈடுபடுவது பெரிய சலுகை என்று உணர்ந்தார்கள். அது இப்பொழுதும் உண்மையாக இருக்க வேண்டும். கர்த்தரின் சீஷர்கள் கபடற்ற ஆடுகளுக்கும், சுயநலம் கொண்ட சீரமைக்கப்படாத உலகத்தார்கள் ஓநாய்களுக்கும் ஒப்பிடப்படுகின்றனர். யூத யுக அறுவடையின் போது, சீஷர்கள் வீடு வீடாகச் சென்று இரந்து திரிய வேண்டும் என்பது அவருடைய விருப்பமில்லை. மாறாக, ஒவ்வொரு கிராமத்திலும் மிகவும் தகுதியான ஜனங்கள் யார் என்பதை விசாரித்து, அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அங்கே தங்கி தங்களது சாட்சியத்தை கொடுக்க வேண்டும். அவர்கள் முற்றிலுமாக கர்த்தரையே சார்ந்திருக்க வேண்டும். தங்கள் தேவைகளுக்காக வேறு முயற்சி எதுவும் பண்ணக்கூடாது. இவைகளெல்லாம் அவர்களது எதிர்கால அறுவடை காலத்திற்கான ஒரு பாடமாக இருந்தது. பிற்பாடு இயேசு அவர்களை அனுப்பும் போது அவர்களுடைய தேவைகளை அவர்களால் முடிந்த மட்டும் பார்த்துக்கொள்ளுமாறு சொல்லி அனுப்பினார். முதல் அனுபவம் ஒரு விசேஷித்த ஒன்று என்றும், அவர்கள் பிரதிநிதிப்படுத்தும் தெய்வீக வல்லமையில் சார்ந்திருக்கவும் நம்பிக்கை கொடுக்கவும் என்றும் சுட்டிக்காட்டுகிறது.

ஆண்டவர் செய்தது போல, அவர்களும் வியாதியஸ்தர்களை குணப்படுத்துதல், பிசாசுகளை துரத்துதல் முதலானவைகளை செய்ய அவருடைய ஆவி அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. இன்றைக்கும் கர்த்தருடைய ஜனங்களுக்கும் இப்படிப்பட்ட அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது. நிலைமைகள் மாறியிருக்கின்றன. அவைகளைக் காட்டிலும் மாபெரும் வேலைகளாகிய ஆவிக்குரிய வியாதி, குருட்டுத்தனம், செவிட்டுத்தன்மை ஆகியவைகளை சொஸ்தப்படுத்துவது தற்கால தேவனுடைய பிள்ளைகளின் சலுகையாக இருக்கிறது.

தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது என்பது சீஷர்களின் ஒரு போதனையாக இருந்தது. அந்த செய்தியால் வசீகரிக்கப்படக் கூடியவர்களாக இருந்தவர்கள் வசீகரிக்கப்பட்டார்கள். தேவனுடைய ராஜ்யம் நூற்றாண்டு காலமாக இஸ்ரயேலருக்காக காத்திருந்து அந்தோ பரிதாபம், அது கொடுக்கப்பட்ட போது சொற்பமான இஸ்ரயேலர்களே அதை ஏற்றுக்கொள்ள தயாராயிருந்தார்கள்! அதன்பிறகு ராஜ்யம் அவர்களிடமிருந்து நீக்கப்பட்டு, உலகம் முழுவதற்கும் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு தேசத்திலிருந்தும் தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பார் மேசியாவின் மணவாட்டியாகவும் உடன் சுதந்தரராகவும் இருக்கும்படி சேர்க்கப்படுகிறார்கள். அவர்கள் மூலம் சீக்கிரத்தில் பூமியில் ஸ்தாபிக்கப்பட்டு அதன் ஆசீர்வாதங்கள் சகல ஜாதிகளுக்கும் அருளப்படும்.

கப்பர்நாகூமிலும், பெத்சாயிதாவிலும் மற்றும் கோராசீனிலும் ஆண்டவர் தாம் பண்ணின போதகத்தையும் பலத்த செய்கைகளையும் குறிப்பிட்டார். சலுகையில அந்த பட்டணங்கள் உயர்த்தப்பட்டிருப்பட்டிருப்பதாக அடையாளமாக சொல்லப்பட்டது. கர்த்தருடைய தயவுகளை புறக்கணித்தப்படியால் பாதாளத்தில் தள்ளுண்டு போகும். சோதோமும் தீருவும், அழிவில் இருந்த இரண்டும் பாதாளத்தில் புழுதிக்கு சென்றது என்று உதாரணமாக கொடுக்கப்பட்டன.

எனினும் நமது கர்த்தர் போதித்த சோதனை அல்லது பரீட்சை அல்லது தீர்ப்பு முடிவானது அல்ல என்றும் எதிர்கால சோதனை, நியாயத்தீர்ப்பு இருக்கும் என்றும் அவர் அறிவிக்கிறார். பரிசுத்த பவுலின்படி ஆயிரம் வருடம் யுகம் முழுவதும் நியாயத்தீர்ப்பின் நாளாக இருக்கும். அதில் அகில உலகமும் சத்தியத்தின் அறிவுக்குள், தேவனைப்பற்றிய அறிவின் சந்தர்ப்பத்திற்கு கொண்டு வரப்படுவார்கள். (அப்போஸ்தலர் 17:31) எனினும் இயேசுவை அறிந்தும் அசைக்கப்படாமல் தங்களது இருதயத்தை கடினப்படுத்துகிறவர்களுக்கு நியாயந்தீர்ப்பின் நாளில் அதற்கேற்றாற் போல் நஷ்டமாக இருக்கும். அப்படிப்பட்ட ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்பின் நாள் இலகுவாக இருந்தாலும் சோதோமின் ஜனங்களுக்கு இன்னும் இலகுவாயிருக்கும். ஏனெனில் அவர்கள் குறைவான வெளிச்சம் மற்றும் சலுகைக்கு எதிராகவே பாவம் செய்திருந்தனர் என்று இந்த காரியத்தை இயேசு பலமாக சுட்டி காட்டினார். (எசேக்கியேல் 16:48-63)

முடிவாக, சீஷர்கள் கூறுவதைக் கேட்டு அவர்களை இகழ்கிறவர்கள், இயேசுவையும் பிதாவையும் இகழுகிறவர்களாக இருப்பார்கள் என்று அவர் தமது தூதர்களுக்கு உறுதி அளித்தார். கர்த்தரால் உண்மையாக நியமிக்கப்பட்டு சுவிசேஷ ஊழியர்களாக அனுப்பப்பட்டவர்கள் அனைவரின் விஷயத்திலும் இது உண்மையாக இருக்கிறது.

## WILL THE EARTH BE BURNED?
## பூமி எரிந்து போகுமா?

நாம் இரண்டாம் வருகைக்காரர்களின் கருத்தை மாத்திரமல்ல, கிறிஸ்தவ தேசங்களின் மரபு வழி விசுவாச பிரமாணத்தின் போதனைகளையும் எதிர்க்க கடமைப்பட்டுள்ளோம். ஏனெனில் நமது பூமி எரிக்கப்படாது. அது உருவக அடையாள பாஷையில் மட்டுமே அப்படி சொல்லப்பட்டது என்று வேதாகமத்தின்படி நாம் அறிவிக்கிறோம். இந்த யுகத்தின் முடிவில் ஒரு மகா ஆபத்து துரிதமாக வந்து தற்கால ஸ்தாபனங்களை, மத, பொருளாதார மற்றும் சமூக ஸ்தாபனங்களை அழிக்கும், விழுங்கும். அடையாள பாஷையில் எரிக்கும் என்று வேதாகமம் போதிக்கிறது. பொங்கி எழும் அக்கினி என்பது அராஜகமாக இருக்கும். வேதாகமத்தின்படி, அதன் பயங்கரமான விளைவு என்பது தற்கால ஸ்தாபனங்களின் சாம்பல் (அழிவு) ஆகும்.

கடந்த ஆறாயிரம் வருடங்களாக தனிப்பட்டவர் மற்றும் தேசங்களின் காரியங்களில் மேடுகளையும் பள்ளங்களையும் பெற்றிருந்தது. கிறிஸ்தவ தேசம் சில செல்வாக்குகளை பெற்றிருக்கிறது. கிறிஸ்தவ மதமானது அதிக செல்வாக்கு பெற்றிருக்கிறது. உண்மையான கிறிஸ்தவ தேசங்கள் உண்மையான பரிசுத்தவான்களை உருவாக்கின. அவர்கள் ஆண்டவரின் அடிச்சுவட்டை பின்பற்றுகிறவர்கள்; அவர்கள் ஜீவிக்கும் போது உலகத்தின் குப்பையைப் போலவும் துடைத்துப்போடுகிற அழுக்கைப் போலவும் கருதப்படுகிறார்கள்; இறந்த பிறகு பரிசுத்தவான்களாகவும் வெற்றி வீரர்களாகவும் இருப்பார்கள். கிறிஸ்தவ சபையானது வல்லமையில்லாத ஒரு தெய்வ பக்தியின் வடிவத்தை பெற்றிருக்கிறது. வடிவமானது அநேக வழிகளில் உலகத்தில் செல்வாக்குக்கும் வல்லமைக்கும் உதவியது; கிறிஸ்து மற்றும் அவரது சபையின் பெயரால் பயங்கரமான குற்றங்களை செய்ய அடிக்கடி வழி நடத்துகிறது.

இப்பொழுது சுவிசேஷ யுகம் முடிவடைந்து கொண்டும் மேசியாவின் யுகம் விடிந்து கொண்டும் இருக்கிறது. புதிய யுகத்தின் திரை தூக்கப்படுவதால் அது மனிதர்களிடையே ஆச்சரியமான பலன்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. இருள், அறியாமை, மூட நம்பிக்கை ஆகியவை புதிய நாளின் வெளிச்சத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. உலகமானது விழித்துக்கொண்டிருக்கிறது, ஏனெனில் இது காலைப் பொழுது, மானிடரின் சிந்தனை சக்தி விரைவுபடுத்தப்பட்டுள்ளது. ஆகையால் ஆச்சரியமான, நீராவி சக்தி, மின்சாரம் போன்ற நமது நாளின் கண்டுபிடிப்புகள் சிந்தனை சக்தியை ஒருவருவக்கொருவர் உலகம் முழுவதும் கொண்டு செல்கிறது. அச்சு இயந்திரம், அஞ்சல் முறை போன்றவை விழித்தலுக்கு சக்தியுள்ள காரணிகள். கர்த்தர் தமது தீர்க்கதரிசிகள் மூலம் அறிவித்தபடி இந்த காலத்தில் அறிவு பூமியை நிரப்பிக்கொண்டிருக்கிறது. (ஏசாயா 11:9; ஆபகூக் 2:14; தானியேல் 12:4)

ஆனால் இந்த அறிவு, தயாரற்ற இருதயத்தை உடைய ஜனங்களிடம் வந்து கொண்டிருக்கிறது. கல்வியறிவற்ற, அறியாமையிலுள்ள கரங்கள் அரசியல், சமூகம், மதம் மற்றும் அரசியல் அதிகாரங்களை பெற நீட்டப்பட்டிருக்கின்றன. தவறுகள் அங்கீகரிக்கப்படுகின்றன; ஆனால் அதற்கு தீர்வு காண நாடுகிறவர்கள் இன்னும் மோசமானதையே செய்கிறார்கள். உலகத்தின் ஒரே நம்பிக்கை தேவன் வழங்குகிற மேசியாவின் ராஜ்யம் என்பதை அனைவரும் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால் இந்தப் பாடம் கற்றுக்கொள்ளப்படுமுன் அதிருப்தியின் ஆவி, அறிவினால் ஊக்கப்படுத்தப்பட்டு சந்தர்ப்பங்களை எடுத்துக்கொண்டு, அறியாமையினால் தற்செயலாக, நமது தற்கால சமூக, மத, அரசியல் மற்றும் பொருளாதார ஸ்தாபனங்களை “யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலம் மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலத்தில்,” “ இதுவரை சம்பவித்திராததும் இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவ காலத்தில் அழித்துப் போடும்.” (தானியேல் 12:1; மத்தேயு 24:21)

சகல அறிவுள்ள ஜனங்களாலும் உணரப்படுகிற இந்த மகா பெரிய பேரழிவு தனித்துவம் வாய்ந்ததாக இருக்கும். இது வேதாகமத்தில் பல்வேறு அடையாள பதங்களால் விளக்கப்பட்டிருக்கிறது. அது சில சமயங்களில் சுழற்காற்றுக்கும், வேறு சமயங்களில் புயலுக்கும் ஒப்பிட்டு விளக்கப்படுகிறது. மறுபடியும் ஒரு பெருங்கடல் அலைக்கும் ஒப்பிட்டு சொல்லப்படுகிறது. கடல் (திரளான ஜனங்களை குறிக்கிறது) மலைகளை (ராஜ்யங்களை குறிக்கிறது) அது முழு பூமியையும் விழுங்கும் அக்கினியாக விளக்கப்படுகிறது. (செப்பனியா 1:18; 3:8) எனினும் ஒவ்வொரு விஷயத்திலும் அது ஒரு அடையாளம் மட்டுமே என்று காண்பிக்க ஒரு அடையாளத்துடன் இணைக்கப்படுகிறது. அது முழு மனுக்குலத்தின் அழிவை அர்த்தப்படுத்தவில்லை. உதாரணத்திற்கு புயலை விளக்கிய பிறகு, நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள், அதன் பலன் பெரும் அமைதி என்று கர்த்தர் தீர்க்கதரிசி மூலமாக அறிவிக்கிறார். (சங்கீதம் 46:8-10) அக்கினி விஷயத்தில், அது முழு உலகத்தையும் (சமூக ஏற்பாடுகள்) விழுங்கும் என்றும் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு. ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படி அவர்களது பாஷையை சுத்தமான பாஷையாக்குவேன் என்றும் வாசிக்கிறோம். (செப்பனியா 3:9)

அக்கினியானது பூமியை விழுங்கும் என்பது, அடையாளமான பூமியை அல்லது சமூக நிலைமைகளை விழுங்குவதை குறிக்கிறது. ஏனெனில் ஜனங்கள் அமர்ந்திருந்து கர்த்தருடைய ஆசீர்வாதத்தை அடைவார்கள். அப்பொழுது உலகிற்கு கொடுக்கப்படும் சுத்தமான சத்தியமானது, நூற்றாண்டு காலமாக உலகிற்கு கொடுக்கப்பட்டு வந்த மாறுபாடான விசுவாச பிரமாணத்தின் குழப்பமான செய்திகளுக்கு மாறானதாக பலமுள்ளதாக இருக்கும். அதை உலகின் சிந்திக்கும் மனங்கள் அதை உணர்ந்து கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருப்பார்கள். அது கிறிஸ்தவர்களின் மனங்களை குழப்பியிருக்கும்.

ஆகையால் நாம் கர்த்தருடைய வார்த்தையை எடுத்துக்கொண்டு, கிறிஸ்தவ தேசங்களின் விசுவாச பிரமாணங்களை நிராகரிப்போமாக. இயேசுவின் இரண்டாம் வருகையில் சொல்லர்த்தமான பூமி எரிக்கப்படும் என்று நினையாதிருப்போமாக. ஆனால் அதற்கு முற்றிலும் மாறாக, “உலகத்தோற்ற முதல் தேவன் நம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைக்கப்பட்ட

மறு சீரமைப்பு காலங்கள்'' என்று அப்போஸ்தலர் பேதுருவின் வார்த்தைகள் அப்பொழுது ஆரம்பிக்கும் என்று நாம் நம்புவோமாக. (அப்போஸ்தலர் 3:19-21) ''பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது'' என்கிற வேத வாக்கியங்களின் அறிவிப்பை ஞாபகத்தில் கொள்ளுவோமாக. (பிரசங்கி 1:4) ''பூமியை வெறுமையாயிருக்க சிருஷ்டியாமல் அதை குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவேற்படுத்தினவர் கர்த்தரே.'' (ஏசாயா 45:18)

பூமி முழுவதும் இன்னும் குடியேற்றப்படவில்லை என்பதை நாம் நினைவுகூருவோமாக. பெரும்பாலான பிரதேசங்கள் இன்னும் ஆராயப்படவில்லை. வானம் தமக்கு சிங்காசனம் என்றும் ''பூமி தமக்கு பாதபடி'' என்றும், தன் பாதஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன் என்றும் பூமியைப் பற்றி தேவன் கூறின வாக்குத்தத்தத்தை நாம் நினைவு கூருவோமாக. (ஏசாயா 66;1; 60:13) மேசியாவின் ராஜ்யம் மனுக்குலத்தை உயர்த்துவது மாத்திரமல்ல பூமிக்கு பரிபூரண ஆசீர்வாதத்தையும் கொண்டு வரும். ''கடுவெளி களித்து, புஷ்பத்தை போலச் செழிக்கும்.''

**R5364**

## PROFITABLE BIBLE STUDY
## பிரயோஜனமான வேதாகம படிப்பு

கிபி325இல் முதலாவது பொதுவான சபை விசுவாச பிரமாணம், நிசேயா பிரமாணம் ஏற்பட்டது முதல் சீர்திருத்த காலம் வரை பன்னிரெண்டு நூற்றாண்டு காலமாக வேதாகம படிப்பு என்பதே இல்லாதிருந்தது. துன்புறுத்தலுக்கு பயந்து இங்கொன்றும் அங்கொன்றுமாக இரகசியமாக வேதாகமப் படிப்பு இருந்தது. பிஷப்புகள் எல்லாம் அப்போஸ்தல பிஷப்புகள், ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலரின் வாரிசுகள் என்ற கொள்கை பரவியிருந்தது. அவர்களை புறக்கணித்துவிட்டு புதிய ஏற்பாட்டின் போதனைகளுக்குச் சென்றால் அது மத விரோதம், ஒரு குற்றம் என்ற கொள்கையே பரவியிருந்தது.

இந்த பன்னிரெண்டு நூற்றாண்டு வருடங்களுக்கு பிறகு வந்த இரண்டு மூன்று நூற்றாண்டு வருடங்களில் வற்புறுத்தலின் பேரில் பிஷப்புகள் வேதாகமத்தை வைத்துக்கொள்ளவும் அனுமதித்தார்கள். ஆனால் அதை தாங்களே படிக்க தடை செய்து அப்போஸ்தல வாரிசுகள் மட்டுமே அதை விளக்கவும் அர்த்தங் கூறவும் வேண்டும் என்று கூறினார்கள். ஆகையால் வேதாகம படிப்பு தடுக்கப்பட்டது. வேதாகமத்தை தவறாக புரிந்து கொண்டால் அது மதத்திற்கு எதிரான கொள்கை, அதற்கு தண்டனை நித்திய ஆக்கினை என்ற அறிவுறுத்தப்பட்டது.

இப்பொழுதுதான் வேத மாணவர்கள், வெளிச்சத்திற்கு பதிலாக இருளை வைத்து, தேவனைப் பற்றியும் வேதாகமத்தைப் பற்றியும் கடந்த பதினைந்து நூற்றாண்டுகளாக தவறாக சித்தரிக்கப்பட்டிருந்த தப்பறையான போதனைகளாகிய மகா மேகங்களுக்கு கீழாக வெளிப்பட ஆரம்பித்திருக்கிறார்கள். இப்பொழுது தான் வேதாக படிப்பானது, கண்ணியை கொண்டு, வருகிற மனித பயமின்றி அதன் உண்மையான ஆவியில் தொடரக்கூடும். இப்பொழுது தான் வேதாகம படிப்பானது, கண்ணியை கொண்டு வருகிற மனித பயமின்றி அதன் உண்மையான ஆவியில் தொடரக்கூடும். இப்பொழுது தான் இந்த உண்மையான உணர்வில் வேதாகம படிப்பை அனுமதிக்கிற பொதுவான கல்வி இருக்கிறது. இப்பொழுது தான் சௌகரியமான மலிவான வேதாகமத்தை நாம் ஒவ்வொரு வீட்டிலும் பெற்றிருக்கிறோம். இப்பொழுதுதான் வேதாகம படிப்புக்கு அதிகமான சந்தர்ப்பத்தையும் ஓய்வையும் பெற்றிருக்கிறோம்.

இப்பொழுது நாம் அனைத்து தேவைகளையும் பெற்றுத் தயாராகியிருக்கிறோம். ஆனால் ஞாபகத்தில் இணைக்கப்பட்டும் குடிவைக்கப்பட்டுள்ள தப்பறையான போதகங்களால் தடுத்து மிதிக்கப்படுகிறோம். அவைகளில் சில விசுவாச பிரமாணத்திலிருந்து வந்தவை. அவைகளில் சில ஞானப்பாட்டுகளிலிருந்து வந்தவை, அவைகளில் சில போதனைகள் மற்றும் கைப்பிரதிகள் மூலம் வந்தவை. அதன் பலனால் தவறான புரிந்து கொள்ளுதலினாலும் முரண்பாடுகளினாலும் நாம் நிரப்பப்படுகிறோம். அது வேதாகமம் தனக்கு தானே முரண்பாடுள்ளதாக காணப்பட கரணமாயிருக்கிறது. இது அப்படியாக இருந்தால் நமது நாளின் அறிவுள்ள ஜனங்கள் வேதாகமத்தை குறித்து ஏளனமாக நினைக்கவும், தெய்வீக ஏவுதலை மறுதலிக்கவும் செய்யும். ஆனால் வேதாகமமானது தனக்குத்தானே மிகவும் இசைவுள்ளதாகவும், விசுவாச பிரமாண போதனைகளுக்கு முற்றிலும் எதிரானதாகவும் இருக்கிறது. இந்த உண்மைகளை, வேதாகமத்தில் முழு நம்பிக்கை வைப்பதற்கும் முழுமையாக புரிந்து கொள்ளுவதற்கும் முன்பாக நாம் கற்றுக்கொள்ளுவது அவசியமாயிருக்கிறது. இந்த ஆசீர்வாதங்கள் குறிப்பாக கடந்த முப்பத்தைந்து வருடங்களாக கர்த்தருடைய ஜனங்களின் அதிகமதிகமான பங்காக இருக்கிறது.

### வேதாகம படிப்புக்கு மூன்று சிறப்பான உதவிகள்

இந்த சூழ்நிலைகளின் கீழாக, சரியான பொருளை பெறுவதும் கடந்த கால தப்பறைகளை விலக்கவும் எப்படி வேதாகமத்தை படிப்பது என்ற கேள்வி எழுகிறது. இந்த பிரச்சனையிலிருந்து தம்முடைய பிள்ளைகளை தேவன் தப்புவிக்க ஏற்ற சமயத்தில் வேதாகம பாடங்களின் ஆறு தொகுப்புகளை (6 volumes) கொடுத்து உதவுகிறார்.

இந்த தொகுதிகளின் தெய்வீக உந்துதலால் வந்தது என்ற பாசாங்கு செய்யாமல், மாறாக, அப்போஸ்தலரின் போதனைக்காட்டிலும் வேறு தெயவீக ஏவுதல் இல்லை என்று காண்பிக்கிறது. எனினும் அவை வேத வாக்கியங்களுக்கு முழுவதும் இசைவாக இருக்கிறது என்று காண்பிக்கின்றன. அவ்வப்போது அவசியம் ஏற்படும் போதெல்லாம், கர்த்தர் போதகர்களையும் பிரசங்கிமார்களையும் எழும்பச் செய்து,

வேதாகம பாடங்களை கற்றுக்கொள்ள விசுவாசிகளுக்கு உதவிச் செய்கிறார்; விசேஷித்தவிதமாக எல்லா சபைக்கும் பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதங்களையும் வழி நடத்துதலையும் அளிக்கிறார். அப்படிப்பட்ட போதக மற்றும் பிரசங்க வேலைகளில் வேத வாக்கியங்களின் விளக்கத்திற்கு தேவன் வேதாகம பாடங்களை (தொகுதிகளை) பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பது அநேகரின் நம்பிக்கையாக இருக்கிறது; வேதாகமத்தில் ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை இசைவுபடுத்துகிற முழுமையான ஆவி இல்லாத போதகர் (6 தொகுதிகள்) மூலமாக அவரது ஜனங்களை வழிநடத்துகிறார்.

அடுத்த கேள்வி அவைகள் எந்த அளவுக்கு வேதாகம படிப்புக்கு கர்த்தருடைய ஜனங்களால் பயன்படுத்த உதவி செய்யக்கூடும் என்பது. அவைகளை பயன்படுத்த விரும்பின வேதமாணவர் வகுப்புகளுக்கோ அல்லது தனிப்பட்ட வேத மாணவனுக்கோ அதன் கடைசியான பகுத்து ஆராய்தலில் எழுந்த கேள்வியாக இருக்கிறது. இதில் எந்தவித தெய்வீக கட்டளையுமில்லை. தேவனுடைய வார்த்தையை ஆராய்வதில் அவைகளின் உதவியை பெறுவதில் தனிப்பட்டவருக்கோ அல்லது ஒவ்வொரு வகுப்புக்கோ சுதந்திரம் இருக்கிறது. எனினும் எந்த காரியத்திலும் எந்த போதகரோ அல்லது புத்தகமோ வேதாகமத்தின் இடத்தை எடுத்துக்கொள்ள முடியாது என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். அது தேவனுடைய வார்த்தையை விளக்குகிற வேலையை மாத்திரமே செய்கிறது.

அநேக ஆயிரக்கணக்கான கர்த்தரின் பிள்ளைகள் தங்களது தனிப்பட்ட வேத ஆராய்ச்சி மற்றும் படிப்பில் இந்த வேதாகம சாவிகளை பயன்படுத்தி பெற்ற மாபெரும் ஆசீர்வாதங்களைக் குறித்து சாட்சியமளித்திருக்கின்றனர். உலகின் சகல பகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான வேத மாணவர் வகுப்புகள் இவைகளை பயன்படுத்தி மாபெரும் பலன்கள் பெற்றதாக கூறுகிறார்கள். இதை அனைவருக்கும் நாங்கள் பரிந்துரைக்கிறோம். காவற்கோபுரம் மற்றும் கைப்பிரதி கழகம் இந்த தொகுதிகளின் சிறிய கேள்வி புத்தகங்களை குறைந்தவிலையில் வெளியிட்டிருக்கிறது. இது தனிப்பட்ட படிப்புக்கு தேவைப்படாது. ஆனால் வேத மாணவ வகுப்புக்கு பயன்படும். ஏனெனில் ஒரு பாடத்தின் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு அதற்கான பதிலை சிந்தித்து மனதில் பதியவைக்க பிரயோஜனமாக இருக்கும். புத்தகங்களை வேத வாக்கியங்களின் ஆதரவுடன் பதிலைப் பெற உதவுகின்றன. இவைகள் பரோயா வேதாகம படிப்பு (Berean Bible Study) என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் நாம் கேள்வி புத்தகத்தையோ, புத்தகங்களையோ அல்லாமல் வேதாகமத்தை படிக்கிறோம்.

விசேஷமாக தயாரிக்கப்பட்ட பொதுவான வேதாகம பதிப்பில் (Common Version) பிற்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளதை இன்னொரு வகையான பரயோயா வேதாகம படிப்பு என்று நாங்கள் கூறுகிறோம். அதில் தலைப்பின் கீழாக படித்தாலும், அந்த பாடத்திற்கேற்ற வசனங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் பிரயோஜனமானவைகள். ஆனால் எங்களது தீர்மானத்தின்படி இவைகளில் கேள்வி புத்தகத்தோடு சேர்ந்துபடிக்கிற வேதாகம படிப்புதான், பெரும்பாலான வேதாகம படிப்புகளில் சிறந்தது என்று நாங்கள் கருதுகிறோம்.

**இரண்டு முறைகள் மாறானது**

சில சமயங்களில் எதிராளிகள் வேதாகம படிப்பின் இந்த முறைகளில் வெளிச்சம் உண்டாக்கி அவர்கள் வேதாகமத்தில் ஒரு அதிகாரத்தை எடுத்துக்கொண்டு பொதுவான ஒரு விவாதத்தை வைக்கிறதாக நம்மிடம் கூறுகிறார்கள். இந்த வழியில் அவர்கள் அறிவும், வெளிச்சமும் சத்தியமும் அடைவார்களானால் அது நல்ல முறை என்று நிரூபிக்கிறது. ஆனால் அதற்கு மாறாக, திருப்தியான பலன் கிடைக்காமல், வாதத்துக்குரிய மற்றும் பல்வேறு கூற்றுகள் கிடைத்து, அவற்றில் ஒன்றும் திருப்தியானதாக இல்லாதிருந்தால் இப்படிப்பட்ட மார்க்கத்தை தொடர்வது பிரயோஜனம் இல்லாதிருக்கும்.

இதில் எது சிறந்தது என்பதை தீர்மானிக்க, வேதாகமத்தில் ஒரு அதிகாரத்தை ஆராய்கிற முறையையும் பரோயா வேதாகம படிப்பையும் பயன்படுத்திப் பார்க்க வேண்டும். ஒரு வேதாகம தலைப்பை எடுத்துக்கொண்டு ஆராயும்படி யோசனை கூறுகிறோம். இப்படி செய்யும் போது பரோயா வேதாகம படிப்பை பயன்படுத்துகிறவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் பத்து அல்லது இருபதுமடங்கு வேதாகம அறிவுள்ளவர்களாயிருப்பார்கள்.

இந்த வேதாகம பாடங்கள் (The Studies in the Scriptures) எந்த ஒருமனித கொள்கையையோ அல்லது விசுவாச பிரமாணத்தையோ பின்பற்றும்படி கூறவில்லை. மாறாக அந்த தலைப்புக்குரிய பல்வேறு வசனங்களை ஒன்று சேர்த்து, இந்த பல்வேறு வசனங்களுக்கு இசைவான ஒரு கருத்தை கொண்டு வரும். மற்ற வேதாகம படிப்பு எல்லாம் குறைவான பலனையே கொடுக்கும். ஆனால் இந்த பரோயா வேதாகம படிப்பு மிகுந்த பலனை கொடுத்திருக்கிறது என்பது அதை பயன்படுத்தினவர்களின் கருத்தாக இருக்கிறது. ஆனால் எது சிறந்த முறை எது அவர்களுக்கு அதிக பலனை கொடுக்கும் என்பதை தீர்மானிப்பது தனிப்பட்டவரின் அல்லது வகுப்பின் முடிவாக இருக்கிறது.


ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ.C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்

வெளியிடுபவர் :



சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,

எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர். சென்னை - 600 019.

கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com

Website : www.thestudiesinthescriptures. com



**FOR PRIVATE CIRCULATION ONLY**